பக்கங்கள்: 16
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | வைகாசி 31 வியாழக்கிழமை 14.06.2018 | கதிர் 220

இனி து ரகசியம் அல்ல!

முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனின் தீவிர ஆதரவாளர் – ஏன் பக்தர் என்று கூடக் கூறலாம் – ஒருவர் விடுவிடுவென எமது அலுவலகத்துக்கு வந்தார். வயதானவர். வந்த களைப்பு ஆற ஓரிரு நிமிடம் எடுத்துப் பேசத் தொடங்கினார்.

பக்கம் 03

# இனங்களிடையே பிளவை ஏற்படுத்தும் விக்கி, சிவாஜி

## அமைச்சர் ராஜித பகிரங்கக் குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூன் 14

"வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் இனங்களுக்கு இடையே பிணக்கை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டு வருகின்றனர். இவர்கள் இனவாதத்தை ஆயுதமாக்கி அரசியல் செய்கிறார்கள்."

இவ்வாறு பகிரங்கக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார் அமைச்சரவை இணைப்பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனரத்ன.

பக்கம் 03

# தான் செய்த தவறை திருத்துவார் மைத்திரி

## தமிழரசு நம்பிக்கை

கொழும்பு, ஜூன் 14

முஸ்லிம் ஒருவருக்கு இந்து கலாசாரப் பிரதியமைச்சுப் பதவி வழங்கப்பட்டமை பிழையான செயற்பாடு என்பதை ஜனாதிபதி உடனடியாக அறிந்துகொள்வார். ஆகவே இதனை உடனடியாகவே திருத்திக் கொள்வார்.

இவ்வாறு தெரிவித்துள்ளார்

பக்கம் 03

# மாணவிகளுக்கு பாலியல் தொல்லை; வட்டுக்கோட்டையில் ஆசிரியர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 14

தனியார் கல்வி நிலையத்துக்கு சென்ற பதின்ம வயதுச் சிறுமியை வன்புணர்ந்தமை மற்றும் சிறுமிகள் சிலருக்குப் பாலியல் தொல்லை வழங்கியமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்

பக்கம் 03

# அரசுக்கு கொடுக்கும் ஆதரவை விலக்கவேண்டும் கூட்டமைப்பு

## மாகாண சபை உறுப்பினர் சுகதாஸ் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 14

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசுக்கு வழங்கிய ஆதரவு

பக்கம் 14

# உயிரிழந்த புலிகளுக்கு நஷ்டஈடு வழங்க எதிர்ப்பு

## சுவாமிநாதனின் யோசனையை நிராகரித்தது அமைச்சரவை

நாட்டில் கடந்த மூன்று தசாப்தங்களாக இடம்பெற்ற யுத்தத்தின் போது உயிரிழந்த விடுதலைப் புலி இயக்கத்தின் உறுப்பினர்களின் குடும்பத்

பக்கம் 14

# தமிழ் – முஸ்லிம் இனங்களை மோத வைப்பதற்கு அரசு சதி

## கஜேந்திரகுமார் காட்டம்

(எஸ்.நிதர்ஷன்)



யாழ்ப்பாணம், ஜூன் 14

தமிழ் – முஸ்லிம் இனங்களுக்கிடையே வேறுபாடுகளை ஏற்படுத்தி இரு தரப்பினரையும் மோத வைக்கும் நிலைமை திட்டமிட்டு ஏற்படுத்தப்படும் சூழ்நிலையில் எங்கள் பிரச்சினையை

பக்கம் 14

# வடக்கு பிரதம செயலாளருக்கு யாழ். மேல்நீதிமன்று அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 14

வடக்கு மாகாணப் பிரதம செயலாளரை இன்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு நேற்று அழைப்பாணை உத்தரவு

பக்கம் 14

# மன்னார் மீனவர்களின் உடல்கள் புங்குடுதீவில் கரையொதுங்கின

## அடையாளம் காட்டினர் உறவினர்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 14

புங்குடுதீவுக் கடற்கரைப் பகுதியில் இரு வேறு இடங்களில் மீட்கப்பட்ட ஆண்கள் இருவரின் சடலங்கள் சகோதரர்களுடையவை என்று அடையாளம் காணப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறைப் பொலிஸார்

பக்கம் 14

# காணாமற்போனோர் அலுவலக திருமலை அமர்வுக்கும் எதிர்ப்பு

## புறக்கணித்து உறவுகள் ஆர்ப்பாட்டம்



திருமலை, ஜூன் 14

காணாமற்போனோர் அலுவலகத்தின் ஆணையாளர்களின் திருகோணமலைக் கூட்டத்தையும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களில் பெரும்பாலானோர் புறக்கணித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கூட்டத்தில் குறிப்பிட்டளவு உறவினர்களே பங்கேற்றுள்ளனர்.

பக்கம் 14

# விரைவில் நல்ல பதில்

## கூறுகிறார் சுவாமிநாதன்



கொழும்பு, ஜூன் 14

இந்து கலாசாரப் பிரதியமைச்சு குறித்து திருப்திகரமான பதில் ஒன்றை விரைவில் வழங்குவார் என

பக்கம் 14

# புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவரிடம் 6 மணிநேர விசாரணை

கொழும்பு, ஜூன் 14

இலங்கைத் தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவரான ஓய்வுபெற்ற பிரதிப் பொலிஸ்மா அதிபர் சிசிர மெண்டிஸிடம், குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று முன்தினம் விசாரணைகளை நடத்தியுள்ளனர்.

பக்கம் 14

# இந்து கலாசார பிரதியமைச்சை கைவிடுகிறார் காதர் மஸ்தான்



## ஏனைய துறைகளை வைத்திருப்பாராம்

யாழ்ப்பாணம், ஜூன் 14

இந்துக் கலாசாரப் பிரதி அமைச்சைத் தவிர்த்து மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் வடக்கு அபிவிருத்தி பிரதி அமைச்சராக மீளவும் பதவிப் பிரமாணம் செய்ய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை இன்று வியாழக்கிழமை சந்திக்கவுள்ளார் எனப் பிரதி அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

பக்கம் 14


வே.அன்பழகனின் தரம் 5 வினாத்தாள் நாளை முதல்

பிரபல ஆசிரியர் வே.அன்பழகன் தயாரித்த தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள், நாளை 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் தொடர்ந்து வெளிவரும். பிரதிக்கு முந்துங்கள்.


# இந்துக்களை மைத்திரி இப்படி அவமதிப்பதா?

## நல்லூரில் நேற்றுக் கண்டனம்



யாழ்ப்பாணம், ஜூன் 14

இந்து கலாசாரப் பிரதி அமைச்சராக இந்து மதத்தைச் சாராதவர் நியமிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நல்லூர் கந்தசுவாமி ஆலய

பக்கம் 14

# வவுனியாவில் போக்குவரத்துச் சபை பஸ்கள் சேவையில் ஈடுபடாமையால் பயணிகள் சிரமம்






வவுனியா, ஜூன் 14

வவுனியா புதிய பஸ் நிலையத்தில் இருந்து உள்ளூர் சேவைகளில் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்கள் சேவையில் ஈடுபடாமை யால் பயணிகள் நேற்றுப் பெரும் அசௌகரியங்களை எதிர் கொண்டிருந்தனர்.

புதன்கிழமை நாளான நேற்று அரச அலுவலகங்ககளுக்கு மக் கள் சேவைக்காக வரும் நிலை காணப்பட்ட போதிலும் அரச அலுவலர்கள் பலர் வவுனியாவில் இருந்து தூர இடங்களில் உள்ள அரச அலுவலகங்களுக்குச் செல்வதில் பெரும் இடையூறுகளை எதிர் கொண்டதுடன் பாடசாலை மாணவர்கள், வங்கி உத்தியோகத்தர்களும் சிரமங்களுக்கு முகம் கொடுத்திருந்தனர்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வவுனியா சாலை உத்தியோகத்தர் ஒருவர் யாழ்ப் பாணத்தில் மரணமடைந்துள்ள நிலையில் அதில் பங்கேற்பதற்காக ஊழியர்கள் செல்லவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றமையாலேயே இந்நிலை ஏற்பட்டதாகப் போக்குவரத்துச் சபை உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, பருவகால சீட்டைப் பெற்றுள்ள அரச உத்தியோகத்தர்கள் மற்றும் மாணவர்கள் இது தொடர்பாக பெரும் விசனம் கொண்டிருந்தனர்.

இந்த நிலையில், அந்த நேரத்தில் தனியார் பஸ்களும் சேவையில் ஈடுபடுவதற்கான நேர அட்டவணை இல்லாமையினால் போக்குவரத்துசபை பஸ்களிலேயே செல்ல வேண்டிய நிலை வவுனியாவில் காணப்பட்டு வருகின் றது.

இந்த நிலையில், பயணிகளின் நலன்கருதி இ.போ.ச பஸ்கள் சேவையில் ஈடுபடாமை தொடர்பாகப் பயணிகள் பலரும் விசனத்துடன் பஸ் நிலையத்தில் காணப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு பயணிகள் தெரிவித்ததையடுத்து ஊடகவியலாளாகள் அங்கு சென்றடைந்ததும் 7.41 மணியளவில் இ.போ.ச. நேரக் காப்பாளர் அலுவலகம் திறக்கப்பட்டு பூவரசன்குளம் மற்றும் செட்டிக்குளம் பஸ்கள் சேவையில் ஈடுபட்டிருந்தமையை அவதானிக்க முடிந்தது. (க-100)

## மஹிந்தவுடன் அமெ. தூதுவர் அரசியல் பேசவில்லை: பீரிஸ்!

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப்புக்கும், மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் அண்மையில் நடந்த சந்திப்பின் போது, அரசியல் விவகாரங்கள் தொடர்பாக எதுவும் பேசப்படவில்லை என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவரான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில், கோட்டாபய ராஜபக்ஷவை கூட்டு எதிரணியின் வேட்பாளராக நிறுத்தக் கூடாது என்று மஹிந்த ராஜபக்ஷவிடம், அமெரிக்கத் தூதுவர் கூறினார் என வெளியான தகவல்கள் குறித்து கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மரியாதை நிமித்தமாகவே, மஹிந்த ராஜபக்ஷவை அமெரிக்கத் தூதுவர் சந்தித்திருந்தார். இதன் போது அரசியல் விடயங்கள் பற்றி எதுவும் பேசப்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

*ஆயுதக்களைவு குறித்து*

## பாதுகாப்புச் செயலருடன் ஜப்பான் தூதுவர் சந்திப்பு!



கொழும்பு, ஜூன் 14

ஆயுதக்களைவு பிரகடனம் தொடர்பான, ஜெனிவாவுக்கான ஜப்பானின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி நொபு ஷிகே தகாமி சாவா, பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்னவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை கொழும்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது, ஆயுதக்களைவு விவகாரம் குறித்து பேச்சு நடத்தப்பட்டது.

இந்தச் சந்திப்பின்போது, இலங்கை மற்றும் ஜப்பானிய அதிகாரிகளும் பங்கேற்றனர்.

## ஒரு லட்சத்து 50 ஆயிரம் குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணம்


குறைந்த வருமானத்தைக் கொண்ட ஒரு இலட்சத்து 50 ஆயிரம் குடும்பங்களுக்குச் சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

சமுர்த்தி நிவாரண வேலைத்திட்டத்தின் கீழ் சுமார் 13 இலட்சத்து 80 ஆயிரம் பேருக்கு நபர்களுக்கு அதன் பயன்கள் கிடைத்துவருகின்றன.

இருப்பினும், இந்த நிவாரணத்தை வழங்குவதற்குப் பொருத்தமானவர்களை அடையாளம் காணப்பட்டுள்ள நிலையிலும், தற்பொழுது சமுர்த்திப் பயன்கள் கிடைக்காத வடக்கு – கிழக்கு பிரதேசங்களில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள குடும்பங்கள் மற்றும் இலங்கையில் ஏனைய பிரதே சங்களில் வாழும் குறைந்த வருமானத்தைக் கொண்ட குடும்பங்கள் பலவற்றிற்கு இந்தப் பயன்கள் கிடைப்பதில்லை என்ற தகவல் பதிவாகியுள்ளது.

இதற்கமைவாக சம்பந்தப்பட்ட மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களின் சிபார்சுடன் சமுர்த்திப் பயன்கள் கிடைக்கவேண்டிய – குறைந்த வருமானத்தைக் கொண்ட 1 இலட்சத்து 50ஆயிரம் குடும்பங்களுக்கு இந்த நிவாரணத்தை விரிவுபடுத்துவதற்காக சமூக ஊக்குவிப்பு அமைச்சர் பி. ஹரிசன் சமர்ப்பித்த ஆவணங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## கோட்டா ஜனாதிபதியானால் நாட்டை விட்டு ஓடி விடுவேன்!


மேர்வின் சில்வா

கொழும்பு, ஜூன் 14

2020இல் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியானால், தான் நாட்டை விட்டு வெளியேறி விடுவேன் என்று முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர் –

மஹிந்த ஆட்சிக்காலத்தில், வெள்ளை வான் கலாசாரத்தை உருவாக்கியவர் கோட்டாபய ராஜபக்ஷ தான். அந்தக் காலகட்டத்தில் மக்கள் வெள்ளை வான்களில் கடத்தப்பட்டனர். கொலை செய்யப்பட்டனர்.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில், பஸில் ராஜபக்ஷவும், கோட்டாபய ராஜபக்ஷவும் தான் நாட்டை ஆட்சி செய்தார்கள்.

அப்போது நாட்டுக்கு வந்த முதலீட்டாளர்களிடம் தரகுப் பணத்தை பஸில் ராஜபக்ஷ பெற்றுக் கொண்டார் என்றும் அவர் தெரிவித்தார்.


## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்
## IFB 4 கேள்வி அறிவித்தல் - திருத்தம்

08.06.2018 ம் திகதி பிரசுரிக்கப்பட்ட IFB 4 கேள்வி அறிவித்தலில் Construction of Gabion wall for ECO tourism Center at Mandaitivu வேலை தொடர்பான MinimumGrade of (ICTAD) CIDA இற்குரிய துறைசார்ந்த நிபுணத்துவம் (speciality) Bridge இலிருந்து IrrigationMf திருத்தப்படுகிறது.

திருத்தம் வருமாறு :

| Bid ID | Description of Work | Estimated Amount ( in Million) (Excluding VAT) | Contract Period (in Months) | Minimum Grade of (ICTAD ) CIDA (Clause – 3) | Required Bid Security | | Non Refundable Fee (Rs.) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Security Amount (Rs.) | Valid Period - Until | |
| JF/PROC /Tourem/ 05/18/2018 | Construction of Gabion wall for ECO tourism Center at Mandaitivu | 22.24 | 05 | C6 or C5 or above (**Irrigation**) | 325,000 | 20.10.2018 | 6,500 |

**நா.வேதநாயகன், தலைவர்,**
**கேள்விச் சபை, மாவட்டசெயலகம், யாழ்ப்பாணம்**

# கொக்குவில் இந்து அதிபர் பொலிஸில் முறைப்பாடு

## பாதுகாப்பை உறுதி செய்யக் கோரி

(எஸ்.நிதர்ஷன்)

போராட்டத்தில் ஈடுபட்ட யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்கள் மீது பாடசாலை நிர்வாகம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவிருக்கும் நிலையில் அவர்களால்பாடசாலைக்கும்தனக்கும் ஏதாவது ஆபத்து ஏற்படலாம் என பதால் பாதுகாப்பு வழங்கக் கோரியும், விசாரணை களை முன்னெடுக்க வலி யுறுத்தியும் பாடசாலை அதிபரால் யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் ஒருவர் மீது அண்மையில் பாலியல் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுத் துண்டுப் பிரசுரங்கள் ஒட்டப்பட்டிருந்தன. இதன் பின்னர் அன்றைய தினமே அந்த ஆசிரியர் மீது இரவுவேளை தாக்குதல் மேற் கொள்ளப்பட்டு அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டார்.

ஆசிரியர் மீதான தாக் தலைக் கண்டித்துச் சக ஆசிரியர்கள் மறுநாள் கவனயீர்ப்புப் போராட்ட மொன்றை மேற் கொண்டனர்.

இதன் பின்னர் ஆசிரியர் மீதான தாக்குதலுடன் தொடர் புடையவர் எனச் சந்தேகிக் கப்படும் மாணவர் ஒருவர் யாழ். பொலிஸாரால் கைது செய்யப் பட்டிருந்தார்.

இந்நிலையில், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது சக மாணவனைப் பொலிஸார் விடுதலை செய்ய வேண்டு மெனக் கோரி மாணவர்களும் போராட் டத்தில் ஈடுபட்டனர்.

ஆயினும் கல்வித் திணைக்கள அதிகாரிகள் மற்றும் மாகாண சபை உறுப் பினர் ஆகியோருடனான சந்திப் புக்களையடுத்து போராட்டம் கை விடப்பட்டிருந்தது.

இந்நிலையிலையே கைது செய்யப்பட்டுள்ள மாணவனை விடுதலை செய்யக் கோரிப் போராட்டத்தில் ஈடுபட்ட சக மாண வர்கள் 25 பேருக்கும் எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையைப் பாடசாலை நிர்வாகம் எடுக்க வுள்ளது.

அவ்வாறு தாம் ஒழுக் காற்று நடவடிக்கை எடுக் கின்றபோது பாடசாலைக்கும் தனக்கும் மாணவர்களால் ஏதாவது ஆபத்து ஏற்படலாம் எனக் கருதி பாதுகாப்பை வழங்குமாறும், அந்த 25 மாணவர்கள் மீது விசாரணைகளை மேற்கொள் ளுமாறும் பாடசாலை அதிபர் ஞானசம்பந்தன் யாழ். பொலி ஸாரிடம் முறைப்பாடு செய்துள் ளார். (ஐ-7)

# ஞானசார தேரருக்கு இன்று தண்டனை

கொழும்பு, ஜுன் 14

கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டுள்ள ஊடகவிய லாளர் பிரகீத் எக்னெலிகொட வின்மனைவி சந்தியா எக்னெலி கொடவை, ஹோமகம நீதிவான் நீதிமன்றில் வைத்து அச்சுறுத்தி யமை தொடர்பில் பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் வண.கலகொட அத்தே ஞானசார தேரர் குற்றவாளி எனக் கடந்த 24 ஆம் திகதி ஹோமாகாம நீதி மன்றம் தீர்ப்பளித்திருந்தது. இந் நிலையில் ஹோமாகமக நீதி வான் உதேஷ் ரணதுங்க அவருக்கு எதிரான தண்ட னையை இன்று வியாழக் கிழமை அறிவிக்கவுள்ளார். (ஐ)

## மாணவிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வட்டுக்கோட்டையிலுள்ள பிரபல பாடசாலை ஆசிரியரான அவரைப் பாடசாலை நிர்வாகம் இடைநிறுத்தியுள்ளதாக அறிய முடிகிறது.

வட்டுக்கோட்டையிலுள்ள தனியார் கல்வி நிலையத்தில் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரிடம் கற்கச் செல்லும் பதின்ம வயது மாணவிகள் பாலியல் வன் கொடுமைக்கு உட்படுத்தப்படு கின்றார்கள் எனச் சங்கானை பிரதேச சிறுவர் நன்னடத்தை அலுவலருக்கு முறைப்பாடுகள் கிடைத்தன.

அந்த முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை செய்ய மாணவிகளின் பெற்றோர்கள் ஒத்துழைப்பு வழங்கவில்லை. அதனால் சிறுவர் அலுவலருடன் பொலிஸார் இணைந்து முன்னெடுத்த விசாரணையில் மாணவிகள் மூவரின் வாக்கு மூலங்கள் பெறப்பட்டன.

அவற்றை அடிப்படையாக வைத்து பதின்ம வயதுச் சிறு மியை வன்புணர்ந்த மற்றும் சிறுமிகளுக்குப் பாலியல் தொல்லை வழங்கினார் என்ற குற்றச்சாட்டுக்களின் அடிப் படையில் ஆசிரியர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

விசாரணைகளின் பின்னர் அவர், மல்லாகம் நீதிவான் நீதி மன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, குற்றஞ்சாட் டப்பட்டுள்ள ஆசிரியர் வட்டுக் கோட்டையில் பிரபல பாடசாலை ஒன்றில் கற்பிக்கின்றார். அவ ரைப் பாடசாலையிலிருந்து நீக்கு மாறு பாடசாலை நிர்வாகத்துக்குப் பழைய மாணவர் சங்கமும் பெற்றோரும் கடும் அழுத்தங் களை வழங்கினர்.

இந்த நிலையில் ஆசிரியர் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகளின் முன்னகர்வுகள் தொடர்பில் பொலிஸார், பாடசாலை அதி பருக்கு அறிவித்திருந்தனர்.

இதனையடுத்து அந்த ஆசிரியரைப் பாடசாலையி லிருந்து இடைநிறுத்துவதாகப் பாடசாலை அதிபர் நேற்று உத்தி யோகபூர்வமாக அறிவித்துள் ளார். (ஐ)

# ரவிராஜ் கொலை வழக்கு;

# மேன்முறையீட்டு மனு ஓகஸ்ட் 2 விசாரணை!

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர் களை விடுவிக்க உத்தரவிட் டமைக்கு எதிராகத் தாக்கல் செய் யப்பட்ட மேன்முறையீட்டு மனுவை ஓகஸ்ட் மாதம் 02ஆம் திகதி விசாரணைக்கு எடுக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்று வழக்கு விசார ணைக்கு வந்தபோது, குற்றம் சாட்டப்பட்டு நிபந்தனையற்ற பிணையில் விடுவிக்கப்பட்ட ஐந்து கடற்படையினரில் மூன்று பேர் நீதிமன்றில் ஆஜராகியி ருந்தனர்.

ரவிராஜ் கொலை வழக்கில் ஜுரிகள் சபையின் ஒருமித்த தீர்மானத்திற்கு அமைவாகக் கொழும்பு மேல் நீதிமன்றத்தால் இந்தக் கடற்படையினர் நிபந் தனையற்ற பிணையில் விடு விக்கப்பட்டமை சட்டத்திற்கு முரணானது என்று மேன் முறையீட்டு மனுவில் கூறப்பட் டுள்ளது.

இதன் காரணமாக கொழும்பு மேல் நீதிமன்றத்தால் வழங்கப் பட்ட அந்தத் தீர்ப்பைச் செல் லுபடியற்றதாக்கி உத்தரவிடு மாறு சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சுரேஷின் தாயார் காலமானார்

ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் தலைவர் க.சுரேஷ் பிறேமச் சந்திரன், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் ஆகியோரின் தாயாரான கந்தையா நாகம்மா தனது 98 வயதில் நேற்று யாழ்ப் பாணத்தில் காலமானார்.

அவரது பூதவுடல் கோப்பாய் தெற்கு, கட்டப்பிராயில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக் காக வைக்கப்பட்டு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இறுதிக்கிரியைகள் செம்மணி இந்து மயானத்தில் நடைபெறும். (ஐ)

## தான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரைராசசிங்கம்.

இந்து கலாசாரப் பிரதி அமைச்சராக நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் நிய மிக்கப்பட்டமைதொடர்பில்நேற்றுப் புதன்கிழமை வெளி யிட்டுள்ள ஊடக அறிக்கை யிலேயே அவர் இதனைக் குறிப் பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரி வித்துள்ளவை வருமாறு:

இந்து கலாசாரப் பிரதிய மைச்சராக ஒரு முஸ்லிம் ஒரு வரை நியமித்திருப்பது மிகப் பெரும் அதிசயமாக இருக்கின் றது. ஜனாதிபதி ஏன் இவ்வாறு சிந்தித்தார் என்று நாங்கள் ஆச்சரியப்பட்டவர்களாக இருக் கின்றோம்.

ஒரு பௌத்த சாசன அமைச் சராக ஒரு முஸ்லிமையோ, கிறிஸ்தவரையோ ஜனாதிபதி நியமிக்கமாட்டார். அவ்வாறு இருக்கின்றபோது எவ்வாறு இந்து சமய விவகாரங்களைக் கவனிப்பதற்காக ஒரு முஸ்லிம் அமைச்சரை நியமித்திருக்கின் றார் என்ற பெரிய கேள்வி எழுந்தி ருக்கின்றது.

வடக்கு-கிழக்குப் பிரதேசங் கள் ஏனைய பிரதேசங்களை விட வித்தியாசமானவை. தமிழ் மொழி, தமிழ் மக்களின் வாழ்வு, கலாசாரம் என்பவற்றைப் பாது காக்கக் கூடிய விதத்தில் தமிழ் மக்களின் உரிமைகளை நிலை நாட்டக்கூடிய ஒரு அரசமைப்பை உருவாக்கி விட வேண்டும் என்பதற்காகவே அரசுக்கு ஒத் துழைப்புகளை வழங்குகின் றோம்.

இந்த அமைச்சுப் பதவி வழங்கப்பட்டமை பிழையான செயற்பாடு என்பதை ஜனாதிபதி உடனடியாக அறிந்துகொள்வார். ஆகவே இதனை உடனடியா கவே திருத்திக் கொள்வார்.

அதன் மூலம் இந்த நாட்டில் இருக்கின்ற சுமூக நிலைமையைக் குழப்பாமல் ஜனாதிபதி நடந்து கொள்ள வேண்டும் என்று எமது மக்கள் சார்பாக அவருக்கு நாங் கள் வேண்டுகோள் விடுக்கின் றோம் - என்றுள்ளது. (ஐ)

## இனங்களிடையே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டுக்குள் பிரச்சினையை ஏற்படுத்தும் எண்ணம் தமிழ் மக்களுக்கு ஒருபோதும் கிடை யாது என்றும் அவர் குறிப்பிட்டார். அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் ராஜித இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித் தவை வருமாறு:-

இனவாதத்தை ஆயுதமாகக் கொண்டசில அரசியல்வாதிகளே இன்று அரசுக்குள்ளேயும் சமுகத்திலும் பிரச்சினைகளை ஏற்படுத்தி வருகின்றனர். குறிப் பாக வடக்கு மாகாண முதல மைச்சர், வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜி லிங்கம் ஆகியோர் இனங் களுக்கு இடையே பிணக்கை ஏற்படுத்தும் வகையிலேயே செயற்பட்டு வருகின்றனர்.

இவ்வாறான அரசியல்வாதி களே தமிழ் மக்களின் குறிப்பாக வடக்கு மக்களின் பிரதான நோக்கம் தனியாட்சி என்றும், பெரும்பான்மையின மக்களுடன் அவர்கள் ஒன்றிணைந்து வாழ முடியாது என்றும் தெரிவித்து அரசுக்குத் தொடர்ந்து அழுத்தங் களைக் கொடுத்து வருகின்றனர். ஆனால் தமிழ் மக்கள் ஒன்றி ணைந்த இலங்கையர்களாகவே வாழ விரும்புகின்றனர்.

விசுவமடுப் பிரதேசத்தின் இராணுவ அதிகாரி இடமாற்றம் பெற்றுச் செல்லும்போது பெரும் எண்ணிக்கையான மக்கள் உணர்வுபூர்வமாகச் செயற் பட்டமை அனைவரது கவனத் தையும் ஈர்த்தது. மக்களின் மனங்களைவென்றஒருவருக்கே இவ்வாறான அங்கீ காரம் கிடைக்கும். நல்லிணக் கத்துக்கு இதுவேசிறந்த உதாரணம்- என் றார். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"காலம் மாறிப் போய்விட்டது" - என்றார் மனக்குறையுடன்.

ஏன், என்ன பிரச்சினை என்று வினவினேன்.

*"எங்கள் காலத்தில் ஊருக்கு ஊர் பாம்பாட்டியைக் காணலாம். இப்போது கண்ணுக்கும் ஒருவர் கூட எத்துப்படுகின்றனர் இல்லை"* - என்றார் சலிப்புடன்.

*"இல்லை ஐயா. சில நாள் களுக்கு முன்னர் நகரில் குரங் காட்டியைக் கண்டேனே!"* - என்றேன்.

*"அதுசரி. எதற்குப் பாம்பாட்டி யைத் தேடுகிறீர்கள்?"* - என் றும் கேட்டேன்.

அவர் கூறிய பதிலைக் கேட்டு நான் விக்கித்துப்போனேன்.

முதலமைச்சர் தனிக்கட்சி தொடங்க வேண்டும் என்று அந்தரப்படும் அவரது ஆதர வாளர்களில் இவரும் ஒருவர். அதற்கான அறிவிப்பை முதல் வர் தாமதித்து வருகின்றார் என்று அடிக்கடி தொலைபேசிப் பேச்சுகளில் குறைபட்டுக் கொள் வார்.

இரண்டொரு தினங்களுக்கு முன்னர் ''பாம்பைத் தேடும் முதல்வர் விக்கி'' - என்று செய்தி பிரசுரித்திருந்தோம். புதூர் நாக தம்பிரான் கோயில் நிகழ்வில் முதல்வர் ஆற்றிய உரையை அப்படியே குறிப்பிட்டு அத னடிப்படையில் அந்தச் செய்தி வெளியாகியிருந்தது.

பாம்பைக் காண்பது தமக்கு நல்ல சகுனம் என்றும், அத னால் நல்ல விடயங்கள் நடக்க முன்னர் பாம்பு தன்னைத் தேடிவருவதைத் தாம் பார்த்து - காத்து - இருக்கும் நிலைமை வந்துவிட்டது என்றும் முதல் வர் விலாவாரியாக அந்தப் பேச் சில் குறிப்பிட்டிருந்தார்.

பாம்பு தோன்றும் நல்ல சகு னம் தமக்கு இதுவரை கிட்டாத தால்தான் புதிய கட்சி தொடங் கும் அறிவிப்பை முதல்வர் தாம திக்கின்றாரோ என்ற எண்ணம் நமது நண்பருக்கு வந்துவிட்டது பாருங்கள்!

"நல்ல பாம்பு ஒன்று முதல் வர் முன்னால் தோன்றினால், அது நல்ல சகுனம் என்று கருதி புதுக்கட்சி ஆரம்பிக்கும் வேலையை முதல்வர் மளமள வென்று தொடங்கி விடுவார். அதுதான் பார்த்தனான். நல்ல பாம்பு அவருக்கு முன்னால் இன் னும் வரேல்லைப் போலும். அதாலை, ஒரு பாம்பு பிடிகாரன் மூலம் ஒரு நல்ல பாம்பைப் பிடிச்சு முதல்வர் வீட்டுக்கு மெல்ல அனுப்பிவைச்சா என்னவென்று யோசிக்கிறேன். அனுப்பிற பாம் பால் முதல்வருக்கோ, ஏனை யோருக்கோ எந்த ஆபத்தும் வந்து விடக் கூடாது. அதுதான் நாகப் பாம்பு எண்டாலும், விஷப் பல் பிடுங்கின பாம்பாய் அனுப்ப வேண்டும். முதல்வர் வீட்டுக்கு பாம்பு ஒன்றை அனுப்பிறதுக் குத்தான் பாம்பாட்டி ஒருவரைத் தேடுறன். எவ்வளவு செலவு எண் டாலும் பரவாயில்லை." - என் றார் அவர். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது.

பாம்பைக் காட்டியாவது கூட் டமைப்பைக் குழப்ப வேண்டும் என்பதிலை அவர் குறியாய் இருக் கிறார் என்பதை மட்டும் புரிந்து கொள்ளமுடிந்தது.

- மின்னல் -

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## கோட்டாபயவின் சிக்கல்

இலங்கையின் உள்நாட்டு அரசியல் விடயங்களில் வலுவான வெளிநாட்டுத் தரப்புக்களின் தலையீடுகள் குறித்து இப்போதெல்லாம் அடிக்கடி செய்திகள் வெளிவருகின்றன.

அவை பற்றிய செய்திகள் வெளியாகத் தொடங்கியதும் தென்னிலங்கைத் தேசியவாதிகள் உடனே கொதிக்கத் தொடங்கி விடுவார்கள்.

தங்களுக்கு வசதி, வாய்ப்பாக இருக்கும்போது உள்நாட்டு விவகாரங்களுக்குள் வெளிநாட்டுத் தரப்புக்களை இழுக்கும் தென்னிலங்கைத் தேசியவாதிகள் விடயங்கள் தங்களிடம் நீதி கேட்கின்றனவாக அமைந்தால் உடனே தட்டை மாற்றிப் போடத் தயங்கமாட்டார்கள்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் கூட்டு எதிரணியின் வேட்பாளராகப் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளரான கோட்டாபய ராஜபக்ஷவைக் களமிறக்க வேண்டாம் என மேற்குலகின் சார்பில் அமெரிக்கத் தூதுவர் அதுல் கெஸாப், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நேரில் கூறியமையை அடுத்து தென்னிலங்கைத் தேசியவாதிகள் குதிக்கத் தொடங்கி விட்டார்கள் – குறிப்பாக சமூக வலைத்தளங்கள் ஊடாக.

இந்தச் செய்தி முதலில் 'காலைக்கதிர்' நாளிதழில் வெளியாகியமையால், தமிழ்ப் பிரிவினைவாதிகள் திட்டமிட்டு இந்தச் செய்தியை விதைத்துள்ளார்கள் என்று திட்டும் தென்னிலங்கைத் தேசியவாதிகளும் உள்ளனர்.

நமது நாட்டு அரசியலுக்குள் தலையிடும் அதிகாரத்தை – ஆணையை – உரிமையை – அமெரிக்காவுக்கு வழங்கியவர் யார் என்று சமூக வலைத்தளங்களில் கூக்குரலிடுகின்றனர் பல நூற்றுக்கணக்கான தென்னிலங்கைத் தேசியவாதிகள்.

அவர்கள் சில விடயங்களை – யதார்த்தங்களை – முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

கோட்டாபய ராஜபக்ஷ அமெரிக்க நாட்டினதும் பிரஜாவுரிமை பெற்றவர். தனது பிரஜை தொடர்பில் கவனமும், அவதானமும் செலுத்துவது மட்டுமன்றி தனது பிரஜை தொடர்பில் பொறுப்புக் கூறும் கடப்பாடும் அமெரிக்காவுக்கு உண்டு.

கோட்டாபய மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் 'தென்னிலங்கைத் தேசியவாதிகளுக்கு' தூசு தட்டுவது போல தட்டி, ஊதி உதறித் தள்ளக்கூடியவையாக இருக்கலாம். 'நாட்டின் சுதந்திரத்தைக் காப்பாற்ற போராடிய தேசிய வீரர்கள்" என்ற முகதா அவர்கள் முன்னால் இருக்கின்றமையால் அவர்கள் இழைத்த கொடூர யுத்தக் குற்றங்கள் அந்த முகதாவுக்குள் மறைந்து விடும் என அவர்கள் கருதலாம். ஆனால் அமெரிக்காவும் மேற்குலகமும் அப்படிப் பார்க்க முடியாது; பார்க்க மாட்டா.

கோட்டாபய மீது சாதாரண அடிப்படை மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் மட்டும் சுமத்தப்படவில்லை. அதையும் தாண்டி மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் யுத்தக் குற்றங்கள் எனும் மிக மோசமான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. சர்வதேச கிரிமினல் குற்ற நீதிமன்றங்களினால் விசாரிக்கப்பட வேண்டிய – மிக மிக மோசமான – குற்றச்சாட்டுக்கள் அவை. அவற்றை இலங்கையின் பிரஜையாக – இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக – மட்டும் இருந்து கொண்டு அவர் இழைத்தார் என்று கூறப்படவில்லை. அதையும் தாண்டி, அமெரிக்க தேசத்தின் பிரஜையாகவும் இருந்து கொண்டுதான் அவற்றை இழைத்திருக்கின்றார் அவர்.

ஆகவே, பாரதூரமான இக்குற்றச்சாட்டுக்கள் தமது பிரஜைக்கு எதிராக இழைக்கப்பட்டிருக்கையில், அது குறித்து நீதி நியாயமான விசாரணை நடத்தி, உண்மையைக் கண்டறிந்து, நிலைமையைத் தெளிவுபடுத்த முன்னர் 'எடுத்தோம் கவிழ்த்தோம்' என்று அமெரிக்கா நடக்க முடியாது. தனது பிரஜை பெரும் – கொடூர – யுத்தக் குற்றங்களை இழைத்திருக்கின்றார் என்று பரவலாக, பகிரங்கமாகக் குற்றம் சுமத்தப்பட்டு வருகையில் –

அது குறித்து சம்பந்தப்பட்ட தரப்புக்கள் நீதி, நியாயமான விசாரணைகளை நடத்தி பொறுப்புக் கூறலை நிலைநாட்டுவதற்குத் தொடர்ந்து மறுத்து வருகையில் –

மேற்படி தனது நாட்டுப் பிரஜை தொடர்பில் உரிய விசாரணைகளை எதிர்கொண்டு உண்மையைக் கண்டறிய முன்னர், அந்தப் பிரஜையை அந்தக் குற்றச் செயல்களுக்கான விசாரணைக்கு உட்படவோ பொறுப்புக் கூறலுக்கு கட்டுப்படவோ இடமளிக்காமல், தப்பிச் செல்லும் விதத்தில், அவரது பிரஜாவுரிமையை இரத்துச் செய்ய அமெரிக்கா இணங்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது வெறும் அபத்தமின்றி வேறில்லை.

தம் மீது சுமத்தப்பட்டுள்ள மோசமான யுத்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நீதி, நியாயமான விசாரணைப் பொறிமுறை ஒன்றின் முன் தோன்றி, தம்மை அவற்றிலிருந்து விடுவித்துக் கொள்ளும் வரை – உலகம் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு கட்டமைப்புச் செயற்பாடு மூலம் தம் மீதான யுத்தக் குற்றங்களை அவர் 'கிளியர்' பண்ணும் வரை – அவரது அமெரிக்கப் பிரஜாவுரிமையைத் துறக்க அமெரிக்கா இடமளிக்க மாட்டாது என்பது தான் நிலைமை.

யுத்தச் சட்டங்கள், அடிப்படை உரிமைகள், வாழ்க்கை முறை விழுமியங்கள் போன்றவற்றை உலகுக்குப் போதித்து வருகின்றது அமெரிக்கா. இந்த விடயத்தில் உலக இரட்சகர் தான் மட்டுமே என்று கருதி செயற்பட்டு வருகின்றது அமெரிக்கா.

அப்படிப்பட்ட அமெரிக்கா, தனது பிரஜை ஒருவர் மீது உலகம் நம்பி ஏற்றுக்கொள்ளும் வகையிலான ஆதாரங்களுடன் யுத்தக் குற்றச்சாட்டுக்கள் பரவலாகவும் மிகுந்த நம்பகத் தன்மை உடையவையாகவும் சுமத்தப்பட்டு வருகையில் –

அதிலிருந்து அவர் தப்பிக் கொள்ள வசதியாக, அவரது அமெரிக்கப் பிராஜவுரிமையை அவர் நினைத்த நேரத்தில் துறந்து வெளியேறுவதற்கு இடமளித்து, இளிச்சவாயனாக நடந்து கொள்ளாது.

அமெரிக்கப் பிரஜையாகவும் இருந்து கொண்டு, புலிகளை அழிக்கும் மூர்க்க யுத்தத்தை முட்டாள்தனமாக முன்னெடுத்தமையின் விளைவை கோட்டாபய இப்போதுதான் புரிந்து கொள்ளத் தொடங்கியிருப்பார்.

# ஆசிரியர் இடமாற்றக் கொள்கையை உடன் நடைமுறைப்படுத்தவேண்டும்

## மாகாண சபை உறுப்பினர் குருகுலராசா கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 14

வடக்கு மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் வளப் பங்கீடு தொடர்பான பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மாகாண சபையால் உருவாக்கப்பட்டுள்ள இடமாற்றக் கொள்கையை உரிய முறையில் நடைமுறைப்படுத்தவேண்டுமென சபையின் முன்னாள் கல்வி அமைச்சரும் உறுப்பினருமான த.குருகுலராசா தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கல்வி வலயங்களில் ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுவதாகவும், அதனால் மாணவர்கள் பல்வேறு பாதிப்புக்களை எதிர்நோக்கி வருவதாகவும் நேற்று முன்தினம் சபை அமர்வின்போது உறுப்பினர்களான து.ரவிகரன் மற்றும் ஆ.புவனேஸ்வரன் ஆகியோர் தெரிவித்திருந்தனர்.

இதற்கு அமைச்சர் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கோரிய உறுப்பினர்கள், முல்லைத்தீவு மாவட்டம் தொடர்பில் அமைச்சர் அலட்சியப் போக்கைக் கடைப்பிடிக்காமல் விரைந்து செயற்பட வேண்டுமென்றும் குறிப்பிட்டனர்.

இதற்குப் பதிலளித்த கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன், பதவியேற்ற நாள் முதல் தன்னாலான அனைத்து நடவடிக்கைகளையும் தாம் வேறுபாடின்றி மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிட்டார்.

இதன்போது பேசிய முன்னாள் கல்வி அமைச்சர் குருகுலராசா, வடக்கு மாகாணத்தில் முல்லைத்தீவு மாவட்டம் உள்ளிட்ட வன்னிப் பகுதியின் பல வலயங்களிலும் ஆசிரியர் பற்றாக்குறை உள்ளிட்ட பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. அந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க வேண்டியது மிக மிக அவசியமான செயற்பாடாக உள்ளது.

குறிப்பாக வடக்கு மாகாண சபையால் தயாரிக்கப்பட்டுள்ள இடமாற்றக் கொள்கைளை அமைச்சு ஏன் சரியாக நடைமுறைப்படுத்தவில்லை? அந்த இடமாற்றக் கொள்கையை உரிய முறையில் நடைமுறைப்படுத்தியிருந்தால் ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் ஆசிரியர் வளப் பங்கீடுகள் உள்ளிட்ட பல பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட்டிருக்கும். ஆகவே இனியும் காலம் தாழ்த்தாது அந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். – என்றார்.

இதற்குப் பதிலளித்த கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன், இடமாற்றக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. புதிதாக நியமிக்கப்படுகின்றவர்களுக்கு அந்தக் கொள்கையை முழுமையாக நடைமுறைப்படுத்தி வருகின்றோம். இந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கும், ஆசிரியர் பிரச்சினைகள் ஏற்படாமல் இருப்பதற்கும், அந்தப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கும் அதிகாரிகள் உள்ளிட்ட சகல தரப்பினரும் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் . –என்றார்.

(ஐ – 7)

# தன்னை விமர்சித்த உறுப்பினரை வெளியேற்றினாராம் தவிசாளர்

கிளிநொச்சி, ஜூன் 14

கரைச்சிப் பிரதேச சபையின் 4 ஆவது அமர்வில் அறிக்கை தொடர்பில் எழுந்த சர்ச்சையால் எதிர்த்தரப்பு உறுப்பினர் ஒருவரைத் தவிசாளர் சபையிலிருந்து ஒரு மணித்தியாலம் வெளியேற்றியுள்ளார்.

கரைச்சிப் பிரதேச சபையின் அமர்வு நேற்றுமுன்தினம் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தலைமையில் இடம்பெற்றது. இந்த அமர்வில் கடந்த அமர்வின் அறிக்கை தொடர்பில் ஆராயப்பட்டபோது, எதிர்த்தரப்பு உறுப்பினர்கள் தங்களின் கடுமையான ஆட்சேபனையைத் தெரிவித்தனர்.

கரைச்சிப் பிரதேச சபையில் தவிசாளர் தொடர்ச்சியாகச் சபை செயற்பாடுகளைக் கட்சி சார்ந்து கொண்டுசெல்கின்றார். தவிசாளர் சபை வாகனத்தைக் கட்சியின் மே தினக் கூட்டத்திற்காகக் கொண்டு சென்ற விவகாரம் காரணமாக சபை ஒத்திவைக்கப்பட்டது. ஆனால் அறிக்கையில் அது தொடர்பில் எவ்வித பதிவும் இடம்பெறவில்லை என எதிர்த்தரப்பு உறுப்பினர்கள் குற்றம் சாட்டியிருந்தனர்.

அதுமட்டுமன்றி தவிசாளர் தனது கட்சி சார்ந்து சபையை கொண்டு நடத்துவதாகவும், தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களைப் பாரபட்சமாக நடத்துகின்றார் எனவும், தவிசாளர் நடுநிலைமையுடன் நடந்துகொள்ள வேண்டும் என்றும் எதிரணி உறுப்பினர்கள் கோரியபோது சபையில் வாக்குவாதம் இடம்பெற்றது.

உறுப்பினர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்காது வேறு விடயங்களுக்குச் சபையைக் கொண்டு செல்ல முற்பட்டபோது அதற்கு இடமளிக்காது எதிர்த்தரப்பினர் தங்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்குமாறு வலியுறுத்தினர்.

இதன்போது எழுந்த சர்ச்சையைத் தொடர்ந்து எதிர்த்தரப்பு உறுப்பினர் ஒருவரைத் தவிசாளர் ஒரு மணித்தியாலத்திற்கு சபையிலிருந்து வெளியேற்றினார். இதன்போது கடும் வாக்கு வாக்குவாதத்தில் இரு தரப்பினர்களும் ஈடுபட்டனர். தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் சத்தியானந்தன், போனஸ் உறுப்பினர்கள் வாயை மூடிக்கொண்டு வெளியே செல்லுங்கள் எனக் கூறியபோது சபையில் கடும் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது.

பின்னர் எதிர்த்தரப்பில் உள்ள சுயேச்சைக்குழு உறுப்பினர்கள் 11 பேரும் வெளியேறிச் சென்று ஒரு மணித்தியாலத்திற்கு பின்னர் மீண்டும் சபையில் வந்து அமர்ந்துகொண்டனர்.

(ஐ – 70)

# சித்தப்பிரமை பிடித்தவர்போல் செயற்படுகின்றார் ஜனாதிபதி

## சிவாஜிலிங்கம் குற்றச்சாட்டு

யார் தன்னை ஆதரித்து நியமித்தார்கள் என்பதை மறந்து சித்தபிரமை பிடித்தவர் போன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயற்படுகிறார் என வட மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற மாகாண சபை அமர்வில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டு வளங்கள் சுரண்டப்பட்டு வருகின்றன. அதேநேரம் இங்கு வாழாத தென்னிலங்கை மக்கள் கொண்டு வந்து குடியேற்றப்பட்டு வருகின்றனர்.

இதனால் தமிழ் மக்கள் பல வழிகளிலும் பாதிப்பை எதிர்நோக்கி வருகின்றனர். ஆகவே இங்கு தொடர்ந்தும் சிங்கள, முஸ்லிம் மக்களைக் குடியேற்றும் நடவடிக்கை தான் முன்னெடுக்கப்பட இருக்கிறதா என்ற கேள்வி எழுகின்றது. அவ்வாறான செயற்பாட்டை அவர்கள் முன்னெடுத்தால் நாங்கள் என்ன செய்ய வேண்டுமென்பதை தீர்மானிக்க வேண்டி வரும்.

தமிழ் மக்கள் ஆதரித்து வாக்களித்து கொண்டு வந்த ஜனாதிபதி மைத்திரிபால தலைமையிலான அரசே தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. தமிழ் மக்கள் நியமித்த ஜனாதிபதியே அதனை மறந்து சித்தபிரமை பிடித்தவர் போன்று செயற்படுகின்றார்.

தொடர்ந்தும் தமிழர் தாயகப் பகுதிகளில் இடம்பெறும் தமிழர்களுக்கு எதிரான திட்டமிட்ட செயற்பாடுகள் அவர்களைப் போராட்டப் பாதைக்கே தள்ளும். – என்றார்.

(ஐ – 7)

### நாளை

15.06.2018
வெள்ளிக்கிழமை
நட்சத்திரம் :திருவாதிரை பி.ப 2.32 வரை
திதி : துதியை மு.இ 9.41 வரை
சுபநேரம் :5.53 – 7.23 வரை
இராகுகாலம் : 10.23 – 11.53 வரை

# வடக்கின் சுகாதாரத்துறை அபிவிருத்திக்கான சர்வதேச ஒப்பந்தம் கொழும்பில் கைச்சாத்து





## மாகாண சுகாதாரத்துறையின் சரித்திரத்தில் முக்கியமான நாள் என சத்தியலிங்கம் பெருமிதம்

வவுனியா, ஜூன் 14

வடக்கு மாகாணத்தின் முன்னாள் சுகாதார அமைச்சரின் முயற்சியால் மத்திய சுகாதார அமைச்சின் அனுமதியுடன் மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் விசேட வைத்திய பிரிவுகளை அமைப்பதற்கான சர்வதேச ஒப்பந்தம் நேற்றுமுன்தினம் மத்திய சுகாதார அமைச்சில் கைச்சாத்திடப்பட்டது.

இது தொடர்பில் முன்னாள் வடமாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

எமது நீண்ட கால முயற்சி இன்று கைகூடியுள்ளது. வடக்கு மாகாணத்தின் சுகாதார அமைச்சராக பொறுப்பேற்ற பின்னர் மாகாணத்திற்கான நீண்டகால திட்டம் ஒன்றை தயாரித்திருந்தோம்.

இதற்காக 17 உபகுழுக்களை அமைத்து துறை சார்ந்த நிபுணர்களின் பங்களிப்புடன் நீண்டகால சுகாதார மேம்பாட்டுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டது.

இவ்வாறான திட்டமொன்றை தயாரித்த ஒரேயொரு மாகாண சுகாதார அமைச்சு எமது மாகாணமாகும்.

இதன் தொடர்ச்சியாக 2016 ஆம் ஆண்டில் மத்திய சுகாதார அமைச்சர் மருத்துவர் ராஜித சேனாரத்னவின் அனுசரணையுடன் நெதர்லாந்து தூதுக்குழுவைச் சந்தித்து எமது நீண்ட கால திட்டத்தைக் கையளித்திருந்தேன்.

அதன்தொடர்ச்சியாக தூதுக் குழுவினர் வடமாகாணத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் 2016 இல் விஜயம் செய்து கள ஆய்வுகளை மேற்கொண்டிருந்தனர்.

இந்த நிலையில், கொழும்பில் நெதர்லாந்து தூதுக்குழுவுக்கும் மத்திய சுகாதார அமைச்சுக்குமிடையே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு நெதர்லாந்து நாட்டு தூதுக்குழுவை சந்தித்ததில் இருந்து நேற்று வரை என்னுடன் இந்த கைங்கரியத்திற்கு ஒத்துழைத்த அனைவருக்கும் எனது நன்றிகள் உரித்தாகுக.

6 கோடி யூரோ நிதி யில் ( அண்ணளவாக ஆயிரம் கோடி இலங்கை ரூபா) வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் சுகாதர சேவையை மேம்படுத்தும் நோக்கோடு கொண்டுவரப்பட்ட இந்தத் திட்டம் எதிர் காலத்தில் உலகத்தர சுகாதார சேவை எமது மக்களுக்கு கிடைக்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும் என நம்புகிறேன்.

இந்தத் திட்டத்தை வடக்கு மாகாணத்திற்கு கொண்டு வருவதற்கு அனைத்து வகையிலும் அனுசரணை வழங்கிய மத்திய சுகாதார அமைச்சர் வைத்தியர் ராஜித சேனரத்ன எமது மக்கள் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.- என்றுள்ளது.

(க - 100)

## நாட்டில் வாகனப் பயன்பாடு அதிகரிப்பு

நாட்டில் தனிப்பட்ட ரீதியிலான வாகனப் பயன்பாடு அதிகரித்துள்ளமையானது பிரச்சினையாக உருவெடுத்துள்ளது என மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் அமல்குமாரகே தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதற்கு தயாராவதற்கான காலம் எழுந்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுப் போக்குவரத்து சேவையை விரிவுபடுத்துவது உள்ளிட்ட பல துறைகளின் ஊடாக இதற்கு தீர்வு தேடலாம் என்று பேராசிரியர் அமல் குமாரகே தெரிவித்துள்ளார்.

## பிரதேச சபையில் நடமாடும் சேவை

சுன்னாகம், ஜூன் 14

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் நடமாடும் சேவை சுன்னாகம் வளர்பிறை சனசமூக நிலையத்தில் இன்று வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மதியம் ஒரு மணி வரை நடைபெறவுள்ளது.

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் வட்டாரம் 1 இல் சுன்னாகம் ஜே/195சுன்னாகம் கிழக்கு ஜே/197 ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டு பயன்பெற முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நடமாடும் சேவை மூலம் மக்களுடைய வீடு, காணி என்பன ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டமையை உறுதிப்படுத்த முடியும். (இ

## ம. எண்ணெய் கொண்டு வாகனம் செலுத்தினால் சட்ட நடவடிக்கை




கொழும்பு, ஜூன் 14

மோட்டார் வாகனப் போக்குவரத்து சட்டத்திற்கு முரணாக மண்ணெண்ணெய்யைப் பயன்படுத்தி பஸ் களை அல்லது கனரக வாகனங் களை செலுத்துவோருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதற்காக அமுலில் உள்ள சட்டம் திருத்தி அமைக்கப்படும் என்று இராஜாங்க அமைச்சர் திலீப் வெத ஆராச்சி தெரிவித்துள்ளார்.

மண்ணெண்ணெய்யைப் பயன்படுத்தி பஸ்கள் செலுத்தப்படுகின்றமை தொடர்பாக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகள் பற்றிய தகவல்கள் கிடைக்குமாயின், பஸ்களின் அனுமதிப் பத்திரம் ரத்து செய்யப்படும்.

இதேவேளை, ஒரு லீற்றர் மண்ணெண்ணெய்க்காக 100 ரூபா செலவீனத்தை ஏற்றுக்கொள்ள அரசுக்கு நேர்ந்திருப்பதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

லொறி மற்றும் பஸ் உரிமையாளர்களின் மண்ணெண்ணெய் பயன்பாடு கடந்த வருடத்தின் நான்கு மாதங்களுடன் ஒப்பிடும் போது இந்த ஆண்டு 41 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

இதனால், அரசுக்கு 400 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டிருப்பதாகவும் நிதி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. மண்ணெண்ணெய்யின் விலையை 70 ரூபாவினால் குறைக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருக்கிறது என்றும் நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

## மின்தடை

யாழ்ப்பாணம், ஜூன் 14

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை-

**யாழ்பிரதேசத்தில்** - ஊரி, களபூமி, CTB, தோப்புக்காடு, Jetty, பலகாடு, Srilanka Navy ஆகிய பிரதேசங்களிலும் - மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ

## றமழான் சிந்தனை



நிச்சயமாக இவ்வுலக வாழ்க்கையில் வீண் விளையாட்டும் அலங்காரமும், செல்வமும் சோதனைக்குரியவையே. மறுமையில் சோதனையும் வேதனையும் அல்லாஹ்வின் மன்னிப்பும் கிடைக்கும் வகையில் இவ்வுலக வாழ்வை அமைத்துக் கொள்வோம்.

**ஸஹர்** 4.19 **சுபஹ்** 4.36

**மஃரிப்** (நோன்பு திறக்கும் நேரம்) 6.29

எம்.எல்.லாபிர்

## சுத்தமான குடிதண்ணீரின்மையால் 900 குடும்பங்கள் பாதிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்துக்குள் உள்ளடங்கும் மங்களகம, கெவுளியாமடு, புளுகுணாவ, கோமகஸ்தலாவ ஆகிய கிராமங்களிலுள்ள சுமார் 900 குடும்பங்கள் சுத்தமான குடிதண்ணீர் இன்றி பல்வேறு உடல் உபாதைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றோம் என கிராமவாசிகள் தெரிவித்துள்ளனர்.

தமது கிராமங்கள் பல்வேறு வகையில் பின்னடைவுகளை எதிர்கொண்டு வருகின்றன என்றும் அதுபற்றி கரிசனைகொள்ளுமாறும் குறிப்பாக தமக்கு அத்தியாவசியத் தேவையாகவுள்ள சுத்தமான குடிதண்ணீரைப் பெற்றுத்தர ஆவன செய்யுமாறும் கிராம மக்கள் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் செய்னுலாப்தீன் ஆலிம் நஸீர் அஹமதைக் கேட்டுள்ளனர்.

ஏறாவூர்ப்பற்று பிரதேச சபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ஆர்.பி. சுனில் பண்டார தலைமையிலான சிவில் சமூகப் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரின் ஏறாவூர் அலுவலகத்துக்கு வருகை தந்து தமது கிராமத்தின் குறைபாடுகளை எடுத்துக் கூறினர்.

குடிதண்ணீர்ப் பிரச்சினை மிகவும் அத்தியாவசியத் தேவையாக உள்ளது. சுத்தமான குடிதண்ணீர் வசதி இல்லாதமையால் பல குடும்பங்கள் சிறுநீரகப் பாதிப்புக்கும், ஏனைய உடல் நலக் கோளாறுகளுக்கும் முகம்கொடுத்து வருகின்றார்கள்.

மங்களகம பகுதி ஒதுக்குப்புறக் கிராம மக்களுக்கு அத்தியாவசியத் தேவையான குடிதண்ணீரைப் பெற்றுத் தருமாறும் அதன் பின்னர் குடியிருப்பு வசதிகள், வாழ்வாதார உதவிகள், ஏனைய உள்கட்டமைப்பு வசதிகளைச் செய்து தருமாறு கேட்டுக் கொள்கின்றோம் என்று வேண்டுகோள்விடுத்த அவர்கள், காட்டு யானைகளின் தொல்லைகளுக்கும் கிராமவாசிகள் முகங்கொடுத்து வருகின்றனர் என்றும் தெரிவித்தனர்.

# கொழும்பில் 6 லட்சம் பேருக்கு முறையான குடிதண்ணீர் வசதி இல்லை

கொழும்பு நகரில் வாழும் ஆறு லட்சம் பேருக்கு முறையான குடிதண்ணீர் வசதி இல்லை என்று கொழும்பு மாநகர மேயர் ரோஸி சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதுபற்றி கொழும்பு மாநகரசபை உறுப்பினர்களுக்கு விளக்கம் அளிக்கும் நிகழ்வொன்று நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்றது.

இதற்கு தீர்வுகாணும் வகையில், கொழும்பு நகருக்கான நீர் விநியோகத்தை மேம்படுத்தும் வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவிருக்கிறது என்று கொழும்பு மாநகர முதல்வர் கூறியுள்ளார்.

நூறு ஆண்டுகள் பழைமை வாய்ந்த நீர் விநியோகக் கட்டமைப்பு நவீனமயப்படுத் தப்படவிருக்கிறது. 600 கிலோமீற்றர் தூரத்திற்கு புதிய குழாய்கள் பொருத்தப்படவிருக்கின்றன. ஆசிய அபிவிருத்தி வங்கி இதற்கென 4,000 கோடிரூபாவை வழங்குகிறது என்றும் கொழும்பு மாநகர மேயர் ரோஸி சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.





# தினசரி ராசி பலன் (14.06.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் வைகாசித் திங்கள் 25 ஆம் நாள் வியாழக்கிழமை. பிரதமைத்திதி இரவு 9.42 மணி வரை பின்னர் துவிதீயை. நட்சத்திரம்: மிருகசீரடம் பகல் 2.04 மணி வரை. பின்னர் திருவாதிரை. மரணயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - பகல் 1.45 மணி முதல் 3.20 மணி வரை.

**சுபநேரம்** - காலை 7.25 மணி முதல் 8.54 மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - வைகாசி மாத தேய்பிறை பிரதமை.

**பிறந்த நட்சத்திர வழிபாடு** - மிருகசீரிடம்.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** - சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். பெண்களின் பிடிவாதத்தால் சில காரியங்கள் தடைப்படும். உத்தியோகத்தில் வேலைச் சுமை மன நிலை பாதிப்பைத் தரும்.

**ரிஷபம்** - ஆக்கபூர்வமான நாள். பொருளாதாரம் மேன்மை அடையும். தடைப்பட்ட காரியம் விரைவில் முடியும். விடாமுயற்சிகளின் மூலம் இவர்களின் செயல்கள் வெற்றியைத் தரும்.

**மிதுனம்** - சுபீட்சமான நாள். பொருளாதாரம் வளம் பெறும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். கல்வியில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும். திருமண காரியங்கள் ஒப்பேறும்.

**கடகம்** - சஞ்சலமான நாள். தேவையற்ற பணச் செலவுகள் உண்டாகும். உறவினர்களால் தொல்லை ஏற்படும். குடும்பச் சொத்துக்களால் பிரச்சினை ஏற்படும். குடும்பத்தில் குழப்பம் வந்து நீங்கும்.

**சிம்மம்** - நன்மையான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்ப வாழ்க்கை உற்சாகமாகச் செல்லும். சிலருக்கு புதிய வீடு வாங்கும் வாய்ப்பு ஏற்படும். பொன், பொருள் சேர்க்கும் வாய்ப்பு உண்டாகும்.

**கன்னி** - மத்திமமான நாள். வருமானம் சுமாராக இருக்கும். உறவினர்களால் வரவும், செலவும் மாறிமாறி வரும். மருத்துவச் செலவுகள் ஏற்படும். குடும்பத்தில் சிறுசிறு சலசலப்புக்கள் ஏற்படும்.

**துலாம்** - யோகமான நாள். நினைத்த காரியங்கள் நடக்கும். செல்வமும், செல்வாக்கும் பெருகும். வேலை பார்க்கும் இடங்களில் மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். அசையாச் சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டாகும்.

**விருச்சிகம்** - கவலையான நாள். வருமானம் குறையும். மருத்துவச் செலவுகள் எட்டிப் பார்க்கும். குடும்ப அமைதி குன்றும். வியாபாரத்தில் நிறையப் போட்டிகள் உண்டாகும். யாரிடமும் வாக்குவாதம் வேண்டாம்.

**தனுசு** - சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதார நிலை சமமாக இருக்கும். உடல் நலக் குறைவு ஏற்படும். தொழிலில் நம்பிக்கையானவர்கள் கூட ஏமாற்றுவார்கள். வரவுக்கு மீறிய செலவுகளைக் கட்டுப்படுத்துவது நல்லது.

**மகரம்** - மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றம் அடையும். பெண்களின் வாழ்க்கைச் சூழ்நிலை சிறப்பாக அமையும். செய்யும் தொழிலில் திடீர் வளர்ச்சி உண்டாகும். சகோதர உறவு வலுவடையும்.

**கும்பம்** - ஆக்கபூர்வமான நாள். பொருளாதாரம் தேவைகளைப் பூர்த்தி செய்யும். குடும்பத்தில் ஒற்றுமை பலப்படும். வியாபாரம் முன்னேற்றம் அடையும். தடைப்பட்ட சுபகாரியம் நிறைவேறி மகிழ்ச்சியைத் தரும்.

**மீனம்** - சலனம் மிகுந்த நாள். பணவரவு குறையும். குடும்பத்தில் வீண் சச்சரவுகள் உண்டாகும். குடும்ப முன்னேற்றத்திற்காக திடீரென்று பணம் செலவு செய்ய வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

சந்திராஷ்டம நாள்; விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.

# நகர அபிவிருத்தி அதிகார சபையின் விசேட நடமாடும் சேவை கொழும்பில்!

கொழும்பு, ஜூன் 14

நகர அபிவிருத்தி அதிகார சபை ஒழுங்கு செய் துள்ள விசேட நடமாடும் சேவை எதிர்வரும் திங்கட்கிழமை கொழும்பு சுதந்திர சதுக்கத்தின் ஆர்கேட் வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

முற்பகல் பத்து மணி முதல் மாலை ஆறு வரை நடைபெறும் இந்த நடமாடும் சேவையில் கட்டட நிர்மாணம், காணி அபிவிருத்தி உட்பட மக்களின் பல்வேறு பிரச்சினைகளுக்கான தீர்வு வழங்கப்படும் என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் 40 ஆண்டு நிறைவையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நடமாடும் சேவை தொடர்பாக கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

# பேரவாவியில் பயணிகள் படகுச் சேவை

கொழும்பு, ஜூன் 14

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து தேசிய வைத்தியசாலை வரை பேரவாவி ஊடாக பயணிகள் படகு சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து தேசிய வைத்தியசாலைக்கும், நகர மண்டபத்திற்கும் செல்லும் மக்களின் நலன் கருதி இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கடற்படையினரின் ஒத்துழைப்பும் இதற்காக பெற்றுக் கொள்ளப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையின் புதிய கட்டடம் கையளிப்பு

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையின் புதிய வகுப்பறைக் கட்டடத்தை கல்வி இராஜாங்க அமைச்சர் வி.எஸ்.இராதாகிருஷ்ணன் மாணவர்களிடம் கையளித்தார்.

கல்வி அமைச்சின் மூலமாக நிர்மாணிக்கப்பட்ட இப்புதிய வகுப்பறை கட்டடம் நேற்று திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பாடசாலையின் அதிபர் செல்வி கிரேஸ் தேவயாளினி தேவராஜா, வடமாகாண கல்வி அமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன், கல்வி திணைக்கள அதிகாரிகள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர்.



# அம்பலாந்தோட்டையில் கடும் காற்று





கொழும்பு, ஜூன் 14

அம்பலாந்தோட்டை ஹுங்கம என்ற பிரசேதத்தில் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் கடும் காற்று வீசியுள்ளது.

நகரத்திலும் அதனை அண்மித்த பகுதிகளிலுமுள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் வீடுகளுக்கும் சேதமேற்பட்டுள்ளது.

சேதங்கள் தொடர்பில் அம்பாந்தோட்டை மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது அதேசமயம் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு முதல் கடும் மழையுடன் காற்றும் வீசி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பிணைமுறி மோசடி குற்றச்சாட்டுக்களுக்கு முகம் கொடுக்க நாம் தயார்; தலதா அத்துகோரள

கொழும்பு, ஜூன் 14
மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பில் குற்றம் சாட்டப்படும் ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள் அதற்கு முகம்கொடுக்க தயாராகவே இருக்கின்றனர் என நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறு சீரமைப்பு அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி கஹவத்த பிரதேசத்தில் நேற்று இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தற்போது மத்திய வங்கி பிணைமுறி மோசடியில் ஐக்கிய தேசியக் கட்சி



நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. அந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு முகம் கொடுக்க நாங்கள் தயாராவே இருக்கின்றோம்.

ஊழல் மோசடி இல்லாமல் நாட்டை மாற்றும் பொறுப்பை நாங்கள் ஏற்றுக் கொண்டுள்ளோம். என்றாலும் அதிகாரத்தை பெற்றுக்கொள்ளும் நோக்கத்தில் சிலர் அரசாங்கத்துக்கு எதிராக பொய் குற்றச்சாட்டுக்களை ஏற்படுத்துகின்றனர். விகாரை அமைப்பதற்கும் சர்வமத குழுவின் அனுமதி பெறவேண்டும் என முன்னாள் ஜனாதிபதி தெரிவித்து வருகின்றார். அவ்வாறான முறை ஒன்று இருப்பது எங்களுக்கு தெரியாது.

மேலும், ராஜபக்ஷ அரசு 20 வருடங்களில் மேற்கொண்ட வேலைத்திட்டங்களைவிட பெரும் வேலைத்திட்டங்களை நாங்கள் அதிகாரத்துக்கு வந்து 3வருடங்களில் மேற்கொண்டிருக்கின்றோம். என்றாலும், நாங்கள் அவற்றை விளம்பரப்படுத்தவில்லை.

சிறிய வேலைத்திட்டங்களுக்கு பெரியளவில் பதாகைகளை அமைக்கும் செயற்பாடுகளை நாங்கள் நிறுத்தியுள்ளோம்.

அத்துடன், 2015 ஜனவரி 8ஆம் திகதிக்கு முன்னர் நாடு எந்த நிலையில் இருந்தது என்பதை மக்கள் மறந்துவிடக் கூடாது. சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதி தலைமையில் விசேட சேவைப் பாராட்டு



கொழும்பு, ஜுன் 14
இலங்கையின் பிரபல எழுத்தாளர்களுள் ஒருவரான கலாநிதி டபிள்யு. ஏ. அபேசிங்ஹ வின் எழுத்துப் பணிக்கு ஐம்பது தாண்டுகள் பூர்த்தியடைகின்றமையை முன்னிட்டு விசேட சேவைப் பாராட்டு நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.

இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

சிங்களம், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் நூல்களை எழுதியுள்ள அவர் பிரபல எழுத்தாளர், கவிஞர், பாடலாசிரியர், மொழிபெயர்ப்பாளர் மற்றும் இலக்கிய விமர்சகர் என்ற வகையில் தனது அரை நூற்றாண்டு கால எழுத்துப் பணியில் 300 க்கும் மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

மூன்று பிரிவுகளைக் கொண்டதாக அவரால் எழுதி வெளியிடப்பட்ட மார்ட்டின் விக்கிரமசிங்க பற்றிய நூல் சிறந்த இலக்கிய முயற்சியாக கருதப்படுகின்றது.

அதேபோல் பல ரஷ்ய மற்றும் இந்திய நாவல்களையும் சிறுகதைகளையும் அவர் மொழிபெயர்த்துள்ளார். 1966 ஆம் ஆண்டில் சோவியத் ஒன்றியத்தின் பாக் நகரத்திலும் 1967 ஆம் ஆண்டில் லெபனான் நாட்டின் பெய்ரூட் நகரத்திலும் இடம்பெற்ற ஆசிய – ஆபிரிக்க எழுத்தாளர்கள் சம்மேளனங்களில் கலாநிதி டபிள்யு. ஏ. அபேசிங்ஹ இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்துள்ளார்.

அவரது அரை நூற்றாண்டு கால இலக்கிய சேவையைப் பாராட்டி வயம்ப பல்கலைக் கழகம் அவருக்கு விசேட கலாநிதி பட்டமளித்து கௌரவித்துள்ளதுடன் இலங்கை அரசாங்கத்தினால் டபிளியு.ஏ. அபேசிங்கவுக்கு கலா கீர்த்தி விருதும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

டபிளியு.ஏ. அபேசிங்ஹ வினால் எழுதப்பட்ட 'எனது உலகமும் அவர்களது உலகமும்' என்ற நூல் இதன்போது ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

கலாநிதி டபிள்யூ. ஏ. அபேசிங்ஹாவின் சேவையைப் பாராட்டும் முகமாக சந்ரசிறி செனவிரத்ன, உதேனி சரத்சந்ர ஆகியோரால் தொகுக்கப்பட்ட 'அபய முத்திரை' மற்றும் தீபசந்ரி அபேசிங்ஹ, சுமுது சதுராணி ஜயவர்தன ஆகியோரால் எழுதப்பட்ட 'அபேசிங்ஹ நூல் தொகுப்பு' ஆகிய இரு நூல்கள் இதன் போது ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன.

கலாநிதி டபிளியு.ஏ. அபேசிங்ஹவின் அரை நூற்றாண்டு கால சேவையைப் பாராட்டிய ஜனாதிபதி , கலாநிதி டபிளியு. ஏ. அபேசிங்ஹ இந்த நூற்றாண்டில் பெருமையுடன் குறிப்பிடக்கூடிய பிரபல எழுத்தாளரும் இலக்கிய வாதியும் கல்விமானும் ஆவார் எனக் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில், பல்லேகம ஹேமரத்ன நாயக்க தேரர், பிரபல பாடலாசிரியர் வண. ரம்புக்கண சித்தார்த்த தேரர், நாடாளுமன்ற உறுப்பினர் மலித் ஜயதிலக்க உள்ளிட்ட அதிதிகள், பிரபல பாடகி நந்தா மாலனி உள்ளிட்ட கலைஞர்கள், எழுத்தாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# லிந்துலை விபத்தில் மூன்று பேர் காயம்!

ஹட்டன் – நுவரெலியா பிரதான வீதியில் லிந்துலை பெயார்வெல் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியுடன் ஓட்டோ ஒன்று மோதி விபத்துக்குள்ளான சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த 3 பேர் லிந்துலை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

தலவாக்கலை பகுதியிலிருந்து லிந்துலை மட்டுக்கலை பிரதேசத்திற்கு சென்ற ஓட்டோவே இவ்வாறு லொறியுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது என லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.

ஓட்டோ சாரதிக்கு மயக்க தன்மை ஏற்பட்டதன் காரணமாக இந்த விபத்து நேர்ந்துள்ளது என லிந்துலை பொலிஸார் மேற்கொண்ட ஆரம்ப விசாரணைகளிலிருந்து தெரியவந்



துள்ளது.

காயமடைந்தவர்களில் ஓட்டோ ஓட்டுநர் மேலதிக சிகிச்சைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த கணவன், மனைவி இருவரும் லிந்துலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை லிந்துலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தேரர்கள் மீது துப்பாக்கிச் சூடு; கதிர்காமத்தில் சம்பவம்

கொழும்பு, ஜூன் 14
கதிர்காமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிரிவெஹர ரஜமகா விகாரையில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் விகாராதிபதியான கோபாவாக தம்மிந்த தேரர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் ஜீப் ரக வாகனமொன்றில் வந்த மூன்று துப்பாக்கிதாரிகள் ரஜமகா விகாரையின் வளாகத்தினுள்ளே துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

இதன்போது, இந்த விகாரையின் விகாராதிபதியான தம்மிந்த தேரர் உட்பட மற்றுமொரு தேரரும் காயமடைந்த நிலையில் கதிர்காமம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக அவர்கள் அம்பாந்தோட்டை ஆதார வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் துப்பாக்கிதாரிகள் பயணித்த ஜீப் வாகனத்தை மீட்டுள்ளதுடன், இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

# காற்றின் அகோரம்; குடிசை தீக்கிரை

மட்டக்களப்பு, ஜுன் 14
மட்டக்களப்பில் வீசி வரும் பலத்த வெப்பக் காற்றால் கோறளைப்பற்று பகுதியில் ஓலைக் குடிசை ஒன்று தீப்பிடித்து எரிந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சில நாள்களாக வீசி வரும் பலத்த கச்சான் காற்று (தென்மேல் பருவப்பெயர்ச்சிக் காற்று) வீசுகின்றது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் வீசிய பலத்த அனல் வெப்பக் காற்றால் கோறளைப் பற்று பிரதேச செயலாளர் பிரிவின் மீரா வோடை தமிழ்ப் பிரிவு 10ஆம் குறுக்கில் ஓலைக் குடிசை ஒன்று தீப்பிடித்து எரிந்துள்ளது.

தான் சமையல் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது திடீரென வீசிய சூறைக் காற்றால் குடிசை தீப்பற்றியது என சபாபதிப்பிள்ளை கோமளம் (வயது 57) தெரிவித்தார்.

அவ்வேளையில் அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் விரைந்து வந்து தீயை அணைத்தனர் என்றும் அவர் கூறினார்.

கூலித் தொழில் செய்து ஜீவனோபாயம் நடத்



தும் தான் மிகுந்த வறுமை நிலையிலுள்ளேன் என்றும் 10ஆம் தரத்தில் கல்வி கற்கும் மகள் உட்பட இரண்டு பெண் பிள்ளைகளுடனும் தானும் குடும்பமும் இந்தக் குடிசையில் வசித்து வருகிறோம் என அவர் கூறினார்.

# அறநெறி கொடி மாதம் வவுனியாவில் அனுஷ்டிப்பு




வவுனியாவில் அறநெறி கொடி மாதமும் திருஞானசம்பந்தர் குருபூசை தினமும் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது.

தேசிய இந்து அறிநெறி கொடி மாதமும் அறிநெறி விழிப்புணர்வும் இந்து கலாசார திணைக்களத்தால் நாடு முழுவதும் மே 30 தொடக்கம் ஜூன் 31வரை அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இதனடிப்படையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார் தலைமையில் இந்நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இதன்போது திருஞானசம்பந்தரது திருவுருப் படத்திற்கு மாலை அணிவித்து குருபூசை தினம் கொண்டாடப்பட்டதுடன், அறநெறி கொடி கல்வி தொடர்பில் பாவற்குளம் கணேஸ்வரா வித்தியால ஆசிரியர் சு.வரதராஜன் கருத்துரை வழங்கியிருந்தார். கலந்து கொண்ட அனைவருக்கும் அறநெறி கொடிகள் அணிவிக்கப்பட்டமையுடன் நிகழ்வு தொகுப்பினை மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் சி.கஜேந்திரகுமார் வழங்கியிருந்தார்.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர், மாவட்ட செயலக பிரதான கணக்காளர் பாலகுமாரன், உதவி மாவட்ட செயலாளர் கமலதாசன், கலாசார உத்தியோகத்தர் ஹேமமாலினி, மற்றும் அரச அதிகாரிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இதன் மூலம் திரட்டப்படும் நிதி அறநெறி பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பயன்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(இ-100)





முல்லைத்தீவு மாவட்டத்தில் வரலாற்று சிறப்பு மிக்க ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய மகோற்சவ ஆண்டு திருவிழா நிகழ்வு நேற்றுமுன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

வடக்கில் தான்தோன்றிய ஈஸ்வரராக ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயம் காணப்படுகின்றது பூலோகநாயகி சமேத வேகாவனேஸ்வரர் ஆக வீற்றிருக்கம் தான்தோன்றீஸ்வரர் ஆலய ஆண்டு திருவிழா நடைபெறுகின்றது.

ஆலயத்தில் சிறப்பு உற்சவங்களாக எதிர்வரும் 24 ஆம் திகதி வேட்டைத்திருவிழாவும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் சிறப்பாக நடைபெறவுள்ளன.

(இ-81)




கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் நிதி ஒதுகீடு பத்துஇலட்சமும் வடமாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள் ளையின் நிதி ஒதுக்கீடு மூன்று இலட்சமுமாக பதின்மூன்று இலட்சம் ரூபா செல வில் வலைப்பாடு மக்களின் பயன்பாட்டுக்கு பொதுமண்டபம் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வலைப்பாடு பங்குத் தந்தை வசந்தன் அவர்களும் வலைப்பாட்டு வைத்தியர்,முழங்காவில் தமிழ் அரசுக் கட்சியின்அமைப்பாளர்த. குவேந்திரன்,யோ.தனராஜ், பூநகரி பிரதேச சபை உறுப்பினர் திருமதி ஜெயச்சித்திரா, எமிலியாம்பிள்ளை, வலைப்பாடு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் இம்மானுவேல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(இ






யாழ். அமெரிக்கன் கோணரின் கலாசார பிரிவினால் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி அதிபர், மாணவர்கள் மற்றும் பழைய மாணவர் சங்க உறுப்பினர்களுக்கு வை.எம்.எம்.ஏ. தலைவர் எம்.எஸ்.எம். றஹீம் தலைமையில் இப்தார் நிகழ்வை நடத்திய போது....

(இ-19)





-சண்முகம் தவசீலன்-

முல்லைத்தீவுமாவட்டசெயலகத்துடன் பெரண்டினா நிறுவனம் இணைந்து நடத்தும் முல்லைவிடியல் – 3 தொழில் மற்றும் உயர்கல்விச் சந்தைக்கான வழிகாட்டல் கருத்தமர்வு நேற்று கரைதுறைப் பற்று பிரதேச செயலகத்திலும்,மண லாறு (வெலி ஓயா) பிரதேச செயலகத்திலும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட இளைஞர் யுவதிகளுக்கு தொழில் சந்தையில் காணப்படும் தொழில் மற்றும் உயர் கல்விவாய்ப்புகள் ,அதற்கு அவர்களை தயார்படுத்திக் கொள்ளும் விதம் தொடர்பான தெளிவான விளக்கங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் வளவாளர்களாக முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் கைத்தொழிற்றுறை திணைக்கள மாவட்ட அலுவலர் செ. சஞ்ஜீவன், பெரண்டினா தொழில் வளநிலையத்தின் மாவட்ட முகாமையாளர் கு.தினேஸ் சந்ரு ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் கலந்துகொள்ள தவறியோருக்கான செயலமர்வுகள் நேற்றுக் காலை 9 மணிக்கு மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்திலும், இன்று வியாழன் காலை 9 மணிக்கு கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திலும் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தொழில்வாய்ப்புக்கான நேர்முகதேர்வுகள் எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி வளாகத்தில் ஆரம்பமாகும்.

இந்நிகழ்வுக்கான ஊடக அனுசரணையை டான் தொலைக்காட்சி மற்றும் capitel Fm வானொலி ஆகியன வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kālaikkathir






ம.பிரான்சிஸ்க்
(ஆசிரியர், சண்டிலிப்பாய்
இந்துக் கல்லூரி)

# இரத்த தானம் செய்வோம்!

## விலைமதிப்பற்ற உயிரைக் காப்போம்!!

இன்றைய அவசர உலகில் பல்வேறு வகையான நிகழ்வுகள் நாள்தோறும் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன. நாம் அன்றாட வாழ்க்கையில் பல்வேறு விபத்துக்களைச் சந்திக்கின்றோம். ஒருவர் விபத்தினாலோ அல்லது வேறு ஏதாவது நோயினாலோ பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அவருக்கு அவசரசிகிச்சை அளிக்கப்படும் போது, அங்கு மிக முகக்கியமாகத் தேவைப்படுவது இரத்தமே. அந்த இரத்தத்தினை நாம் பிறருக்கு வழங்கும் பொழுது அவர்களின் உயிரைக் காக்கும்.

இன்று 14.06.2018 உலக இரத்த தான தினம் அல்லது இரத்தம் வழங்கும் கொடையாளிகள் தினம் ஆகும் World Blood Donor Day. இவ் உலக இரத்ததான தினம் ஒவ்வோர் ஆண்டும் ஆனி மாதம் 14 ஆம் திகதி உலக சுகாதார நிறுவனம் ஐக்கிய நாடுகள் சபையின் ஒத்துழைப்புடன் சர்வதேச ரீதியில் கொண்டாடி வருகிறது. இரத்தப் பிரிவுகளான A,B,AB,O ஆகிய பிரிவுகளைக் கண்டுபிடித்த கார்ல்லென்ஷ்டினரின் Karl Landsteiner என்பவர் பிறந்தநாளிலே இத்தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. ஒவ்வொரு இரண்டு விநாடிகளுக்கும் உலகில் யாரோ ஒருவருக்கு இரத்தம் தேவைப்படுகிறது.

இரத்ததானம் அல்லது குருதிக் கொடை என்பது ஒருவர் தனது இரத்தத்தை இன்னொருவருக்கு – பிறருக்குப் பயன்படுத்திக் கொள்ளும் மனப்பான்மையுடன் தானமாக வழங்குவது ஆகும். இந்த தானத்தின் மூலம் எல்லா வழங்குநரும் பெறுநரும் இதன் பலா பலன்களை தாங்கள் வாழும்போதே அனுபவிக்கிறார்கள். விபத்தினாலோ, யுத்த அனர்த்தங்களினாலோ அல்லது பல்வேறு அனர்த்த காரணங்களினாலோ அளவிற்கு அதிகமான குருதி ஒருவரிடமிருந்து வெளியேறி சத்திர சிகிச்சைகளின் போது அவருக்கு குருதி தேவைப்படும்போது மற்றும் குருதி மாற்றுச் சிகிச்சைக்கு உட்படுத்தப்படும் போதும் குருதியைத் தானமாக பெறுபவர்கள் பயன் அடைகிறார்கள்.

அதேநேரம், குருதியைப் பெறுபவர் தன் உயிரை மீளப்பெற்றுக் கொள்வதி



னூடாக நன்மையடைவதைப் போலவே இரத்ததானம் செய்பவர்களும் மறைமுகமாக பயனடைகிறார்கள். இரத்தம் வளங்குபவர்களின் சின்னம் சிறிய இச்செயற்பாடு பல சந்தர்ப்பங்களில் ஓர் உயிரைக் காப்பாற்றி விடுகிறது. இந்த மகிழ்ச்சியான மனோநிலை இவர்கள் வாழவும் வளரவும் வழிசமைக்கின்றது. அத்துடன் இரத்ததானம் செய்பவர்களின் உடலில் புதிய குருதி உற்பத்தியாவதனால் அவர்களும் ஆரோக்கியமான வாழ்வைப் பெற துணைபுரிகின்றது. இந்த உண்மையை இரத்ததானம் செய் வோர் என்ற எல்லைக்கு வெளியே இருந்து பார்ப்போர் புரிந்து கொள்வதில்லை.

### உலக இரத்தான தினத்தின் பிரதான குறிக்கோள்கள்:-

உலகில் நவீன தொழில்நுட்பங்கள் இன்று பெரும் அளவு முன்னேறிய போதிலும் குருதிக்கு மாற்றீடாக வேறு எந்த ஆக்கக்கூறுகளும் கண்டுபிடிப்பப்படவில்லை என்றுதான் கூறவேண்டும். இரத்தம் தேவைப்படுவோருக்கு இரத்தமே வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கப்படாவிடின் தேவைப்படுபவர் மரணிக்கவும் கூடும். உலக ரீதியில் இத்தினத்தை கொண்டாடுவதற்கான முக்கிய நோக்கம் இரத்ததானம் வழங்குபவர்களை கௌரவப்படுத்தப்பட வேண்டும் என்பதாகும்.

ஒவ்வொருவருக்கும் என்றோ ஒரு நாள் இரத்தத்தின் மூலம் சிகிச்சை செய்யவேண்டிய தேவை ஏற்படலாம் என்ற அடிப்படையில் இந்த வேலைத்திட்டம் மிகவும் பயபக்தியுடன் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. அதேநேரம், உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கையின் பிரகாரம் உலக சனத்தொகையில் ஒரு வீதத்துக்கும் குறைவானவரகளே இரத்த தானத்தை செய்கின்றனர். எல்லா நோயாளர்களுக்கும் தேவையான இரத்தம் மூலமான சிகிச்சையை உத்தரவாதப்படுத்தி வழங்க இரத்ததானம் செய்வோரின் தொகை அதிகரிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்படுகின்றது.

மேலும் உலக மக்கள் வழங்கும் இரத்ததானம் ஆண்டுதோறும் 81 மில்லியன் அலகுகளுக்கும் அதிகமாக இருந்தபோதிலும் இதில் 38 வீதமான பங்களிப்பினையே வளர்முக நாடுகளில் வழங்கப்படுகின்றது. ஆனால், உலக சனத்தொகையின் 82வீதமானோர் வளர்முக நாடுகளில் வாழ்கின்றனர். இந்நிலையில் இந்நாடுகள் தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி உலக சுகாதார நிறுவனம் மக்களுக்கு பல்வேறுபட்ட வகைகளில் புரிந்துணர்வை ஏற்படுத்த முயன்று வருகின்றது.

சாதாரண எடையுள்ள ஓர் ஆரோக்கியமான மனிதனின் உடலில் 5 முதல் 6 லீற்றர் இரத்தம் உள்ளது. அதில், இருந்து வெறும் 300 முதல் 350 மில்லிலீற்றர் (ஒரு யுனிட்) இரத்தம் மட்டுமே தானத்தின் போது பெறப்படும். அவ்வாறு கொடுத்த இரத்தத்தின் அளவு இரண்டே வாரங்களில் நாம் உண்ணும் சாதாரண உணவிலேயே மீண்டும் உற்பத்தியாகி விடும் எனப்படுகிறது.3 மாதங்களுக்கு ஒரு முறை எந்தவித பாதிப்பும் இன்றி இரத்ததானம் செய்ய முடியும் என்றும் கூறப்படுகிறது.

இரத்ததானம் அளிப்பதால் நமது உடலுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. நமது உடலில் புதிய இரத்தம் உற்பத்தியாகும். அது உடலுக்கு நன்மையாகத்தான் அமையும். இரத்த தானத்தின்போது நாம் இழக்கும் சிவப்பணுக்களின் எண்ணிக்கை 56 நாள்களிலேயே சீராகி விடும். இரத்ததானம் அளிப்பதற்கு எந்த விதமான உணவுக் கட்டுப்பாடோ, மருந்தோ தேவையில்லை. உடலில் இருந்து இரத்தம் எடுக்க 5 அல்லது 10 நிமிடங்கள் மட்டுமே ஆகும். ஆனால் இரத்ததானம் அளித்த பிறகு 10, 15 நிமிடங்கள் ஓய்வெடுத்த பின் அங்கிருந்து



புறப்படமுடியும் எனவே மொத்தமாகவே இரத்ததானம் அளிக்க 30 நிமிடங்கள் போதும். இரத்ததானம் அளித்த பிறகும் கூட கொடுத்தவர் தங்களது அன்றாட வேலைகளில் எப்போதும் போல் ஈடுபடலாம். எந்த சிக்கலும் இருக்காது எனக் கூறப்படுகின்றது.

### இரத்ததானம் செய்வதற்கான தகுதிகள்:

★ இரத்த தானம் செய்பவரின் பொதுவாக 18-60 வயதுக்கிடைப்பட்ட சுகதேகிகளாக இருத்தல் அவசியம்.

★ இரத்த ஹிமோகுளோபின் அளவு 12 கிராமிற்கு குறையாமலும் 16 கிராமிற்கு கூடாமலும் இருக்க வேண்டும்.

★ இரத்த தானம் செய்பவரின் எடை 50 கிலோவிற்கு குறையாமல் இருக்க வேண்டும்.

★ ஆண், பெண் இருபாலரும் இரத்ததானம் செய்ய தகுதியுடையவர்கள்.

★ எந்த ஒரு தொற்றுநோய் பாதிப்பு ஏற்பட்டவராகவும் இருத்தல் கூடாது. நீரிழிவு நோய், காசரோகம், மேகநோய், இரத்த அழுத்தம், வலிப்பு நோய், எய்ட்ஸ் போன்று இரத்தத்தின் மூலம் பரவக்கூடிய நோய்கள் இருக்கக் கூடாது.




★ கடந்த ஓராண்டுக்குள் எந்த தடுப்பு மருந்தும் உபயோகப்படுத்தி இருத்தல் கூடாது.

★3 ஆண்டுகளில் மஞ்சள் காமாலை நோய் தாக்கியிருக்கக் கூடாது.

★ இரத்ததானம் செய்வதற்கு 48 மணி நேரத்திற்கு முன்பு வரை எந்த போதைப் பொருளையும் எடுத்திருக்கக் கூடாது

### இரத்ததானம் அளிப்போர் அடையும் நன்மைகள்

★ இரத்தப் பிரிவு, இரத்தத்தில் மஞ்சள் காமாலை, மலேரியா, பால்வினை நோய் மற்றும் எய்ட்ஸ் கிருமிகள் உள்ளனவா என்று பரிசோதிக்கப்பட்டு இரத்த தானமளிப்பவர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

★ இரத்த தானம் செய்வது பிறர் நலன் காப்பதற்கு மட்டுமல்ல தன் நலன் காப்பதற்கு மட்டுமல்ல தன்நலன் மேம்படுவதற்கும் உதவும்.

★ இரத்த தானம் செய்வது இயற்கையாக புதிய இரத்தம் உடலில் ஏற்றப்படுவதற்குச் சமம்.

★ தற்போதைய பல்வேறு ஆய்வுகளில் தொடர்ச்சியாக இரத்ததானம் செய்பவர்களுக்கு மாரடைப்பு (Heart-attack) ஏற்படும் வாய்ப்பு குறைவு என்று கண்டறியப்பட்டுள்ளது.

★ ஹிமோகுளோபின் (Heamoglobin) அளவினை கட்டுப்படுத்தவும் சமச்சீராக பராமரிக்கவும் இரத்த தானம் பயன்படுகிறது.

★ இரத்த தானம் செய்வதன் மூலம் இரத்த அழுத்தம் சீராக பராமரிக்கப்படுகின்றது. இதன் மூலம் பலவிதமான நோய்கள் தவிர்க்கப்படுகின்றன.

★ இரத்ததானம் செய்வதன் மூலம் எந்த பின்விளைவுகளும் ஏற்படா.

### இரத்த வங்கியும் அதன் செயல்பாடுகளும்:

தானமாக பெறப்பட்ட இரத்தத்தைச் சேமித்து வைப்பதற்காக அரசு மருத்துவமனைகள், அரசால் அனுமதிக்கப்பட்ட தனியார் அமைப்புகள் மூலம் இரத்த வங்கிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சேகரிக்கப்பட்ட இரத்தம் இரத்த வங்கிகளில் குளிரூட்டப்பட்டு பாதுகாக்கப்படுகின்றது.

### இலங்கையில் இரத்ததானம்:

இலங்கையில் இரத்தமேற்றும் முறை 1950களில் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. பின்பு 1968 ஆம் ஆண்டு முதற்தடவையாக இரத்ததானம் பெறும் நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது இரத்ததானம் மிக அவசியமாக இருப்பதனால் இரத்ததானம் செய்வதற்கு பல மக்கள் அமைப்புக்கள் ஆர்வம் காட்டி வருகின்றன.

இரத்ததானம் செய்வது எவ்வளவு நன்மையானது இலகுவானது என்பதை நாம் அனைவரும் உணரந்து கொள்ள வேண்டும். அனைவரது தோலில், நிறத்தில், மதத்தில், பண்பாட்டில் வேறுபாடு இருந்தாலும் அனைவரின் உடம்பெங்கும் பரந்து ஓடும் குருதியின் ஒரே நிறம் சிவப்புத்தான்.


எனவே நாம் அனைவரும் தொடர்ச்சியான தன்னார்வக் குருதி கொடைகளின் மூலம் நாட்டினுடைய தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு உற்சாகத்துடன் இரத்ததானம் செய்ய முன்வரவேண்டும் இந்த உயிரின் நன்கொடையானது ஒருவரால் அடுத்தவருக்கு கொடுக்கக் கூடிய அதி உயரிய நன்கொடையாகும். இரத்ததானம் செய்வோம், மனிதாபிமானத்தை வளர்ப்போம் விலைமதிப்பற்ற உயிர்களைக் காப்போம். பிறர் உயிர் வாழ எமது பங்கும் இருக்கச் செய்வோம். ★




# கல்விக் கதிர் வெளியீடு

## இலங்கையின் நிர்வாகக் கட்டமைப்பு

1. அரசியல் மாகாணம் :- 09
2. நிர்வாக மாவட்டம் :- 25
3. தேர்தல் மாவட்டம் :-22
4. கல்வி மாவட்டம் :- 31
5. பிரதேச செயலாளர் பிரிவு :- 312
6. கிராமசேவகர் பிரிவு :- 15000 (அண்ணளவாக)
7. கிராமங்கள் 38259
8. உள்ளூராட்சி சபைகள் :- 330
   - ★ மாநகர சபைகள் :- 18 + (புதியவை - 5) = 23
   - ★ நகர சபைகள் :- 42
   - ★ பிரதேச சபைகள் :- 270



## இலங்கையின் கல்வி பற்றிய தகவல்கள்

1. இலவசக் கல்வியின் தந்தை: C.W.W கன்னங்கரா - 1949
2. இலவச பாடநூல்: 1989 முதல் வழங்கப்படுகிறது.
3. இலவச மதிய உணவு: 1989 முதல் வழங்கப்படுகிறது.
4. இலவச பாடசாலை சீருடை: 1993 முதல் வழங்கப்பட்டடுகிறது.
5. பாடசாலை சாரணர் இலக்கம்: 1917 இல் நிறுவப்பட்டது.
6. தேசிய பாடசாலை: 1987 இல் ஆரம்பிக்கப்பட்டடது.
7. இலங்கைப் பல்கலைக்கழகம்: 1942 (கொழும்பு)
8. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு: 1978
9. மகாபொல அறிமுகப்படுத்தப்பட்டது: 1981
10. தேசிய கல்வி ஆணைக்குழு: 1990
11. தேசிய கல்வி நிறுவனம் (NIE): 1985 (மகரகம)
12. இலங்கை திறந்த பல்கலைக்கழகம்: 1980
13. இலங்கை தொழிற்நுட்பக் கல்லூரி: 1893 (மருதானை)
14. கல்வியியல் கல்லூரிகள்: 01.10.1985
15. இலங்கை ஆசிரியர் சேவை: 06.10.1994
16. இலங்கை நிர்வாக சேவை (SLAS).: 1963 (1948 முதல் சிவில் சேவை)
17. இலங்கை கல்வி நிர்வாக சேவை (SLEAS): 1985 (முன்னர் கல்விச் சேவை)
18. கல்வி வலயங்களின் எண்ணிக்கை: 97
19. கல்விக் கோட்டங்களின் எண்ணிக்கை: 302
20. பாடசாலைகளின் எண்ணிக்கை: 10,650
21. நூலகங்களின் எண்ணிக்கை: 6,698
22. பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை: 15


## புள்ளிகளை இணையுங்கள்






## நிறம் தீட்டலாம் வாங்க





## ஆட்டைக் காணோம்

முன்னொரு காலத்தில் கோணங்கி பட்டினம் என்ற ஊரில் மந்தை மேய்ப்பன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவனிடம் நிறைய ஆடுகள் இருந்தன. அவற்றை அவனால் காவல்காக்க முடியவில்லை. தினமும் ஒவ்வொரு ஆட்டை ஓநாய்கள் கவர்ந்து சென்றன.

இதனால் என்ன செய்வது என்று தெரியாமல் வேட்டை நாய் இரண்டை வாங்கி காவலுக்கு வைத்தான். அவற்றிற்கு தினமும் மாமிச உணவு கொடுக்க வேண்டுமே.. இதற்காக தினமும் இரண்டு எலிகளை அடித்து உணவாக கொடுத்தான். அப்படி இருந்தும் தினமும் ஒரு ஆடு காணாமல் போனது. இதனால் மேய்ப்பனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. வேட்டை நாய்கள் மீது கோபம் கோபமாக வந்தது..

ஒரு நாள் என்ன நடக்கிறது என்பதை மறைந்திருந்து கவனித்தான். அப்பொழுது ஓநாய் ஒன்று வந்து ஆட்டை கொன்று இழுத்துச் சென்றது. அது சாப்பிட்டுவிட்டு போடும் மீதி ஆட்டை இந்த வேட்டை நாய்கள் இன்பமாக தின்றன. இப்படி நடப்பதை கண்ட அவன் திடுக்கிட்டான். மிகவும் சோகமாக உட்கார்ந்தான். அப்பொழுது அந்த வழியாக முனிவர் ஒருவர் வந்தார். அவரிடம் தன் கஷ்டத்தை சொல்லி அழுதான் மந்தை மேய்ப்பவன்.

அதற்கு முனிவர், மகனே யாருக்கும் வயிறார உணவு கொடுத்தால் தான் வேலை செய்வர். நீயோ இரண்டு எலிகளை மாத்திரம் நாய்களுக்கு உணவாக கொடுக்கிறாய். இது அவைகளுக்கு காணாது.

நீ அவ்வப்போது உன் வீட்டிற்காக ஆட்டை வெட்டுகிறாய் அல்லவா? அந்த மாமிசத்திலிருந்து சிறு துண்டுகளையாவது எடுத்து இந்த நாய்களுக்கு கொடுக்க வேண்டும். அப்படி கொடுத்தால்தான் அவை உனக்காக நன்கு வேலை செய்யும்," என்றார்.

அதன்படியே செய்வதாக ஒப்பு கொண்டான் மேய்ப்பன். அப்படியே செய்து வந்தான். அதற்கு நல்ல பலன் கிடைத்தது. அன்றிலிருந்து மந்தையில் ஆடுகள் குறையவில்லை.

மறுநாள் ஓநாய்கள் ஆட்டை தின்ன வந்தன. அதை கண்ட வேட்டை நாய்கள் அவைகளை விரட்டின. என்ன இத்தனை நாள்களாக நாங்கள் விட்டு சென்ற மாமிசத்தை தின்றீர்கள். இப்பொழுது உங்களுக்கு என்னவாயிற்று?" என்றன.

உங்களது எச்சில் மாமிசம் எங்களுக்கு வேண்டாம். எங்கள் தலைவர் வயிறு நிறைய எங்களுக்கு மாமிசம் கொடுக்கிறார்," என்றன.

அவற்றை மீறி ஓநாய்கள் மந்தைக்குள் நுழைந்தன. அவைகள் மீது பாய்ந்து கிழித்து கொன்றன வேட்டை நாய்கள். மிகவும் மகிழ்ச்சி அடைந்தான் மந்தை மேய்ப்பன்.



### தம்பி, தங்கையரே!

காலைக்கதிரின் 'கல்விக்கதிர்' வெளியீட்டில் உங்களின் சித்திரங்கள், கவிதை மற்றும் ஆக்கங்களையும் வெளியிடவுள்ளோம். உடன் அனுப்பி வையுங்கள்.

முகவரி : 'காலைக்கதிர்' சிறுவர் சஞ்சிகைப் பிரிவு 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

# பிரதி அமைச்சராக மஸ்தான் இருக்கலாம்; ஆனால் இந்து கலாசாரத்தைப் பிரித்தெடுப்பதே சரியானது

கொழும்பு, ஜூன் 14

மீள்குடியேற்ற, புனர்வாழ்வு பிரதி அமைச்சராக காதர் மஸ்தான் இருப்பதில் பிரச்சினை இல்லையெனத் தெரிவித்துள்ள அமைச்சர் மனோ கணேசன், எனினும், மீள்குடியேற்ற, புனர்வாழ்வு அமைச்சில் இருந்து இந்து கலாசார அமைச்சை பிரித்தெடுத்து, அதை வேறு ஒரு பொருத்தமான அமைச்சுடன் இணைக்க வேண்டுமெனத் தெரிவித்துள்ளார்.

மீள்குடியேற்ற, புனர்வாழ்வு அமைச்சில் இருந்து இந்து கலாசார பிரதியமைச்சராக, காதர் மஸ்தான் நியமிக்கப்பட்டமைக்கு தொடர்ச்சியாக எதிர்ப்புகள் வெளியிடப்பட்டு வரும் நிலையில், அமைச்சர் மனோ இந்த விடயம் தொடர்பில் பேஸ்புக்கில் தனது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார்.

அந்தப் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

மீன்வளத் துறை அமைச்சர், மீனவராகவும், கல்வி அமைச்சர், கல்வி பேராசிரியராகவும் இருக்கவேண்டும் என்பதில்லை. ஆனால், இதே விதி மத விவகார அமைச்சுகளுக்கு பொருந்தாது. இஸ்லாமிய மத விவகாரம், அமைச்சர் சுவாமிநாதனிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தாலும், நான் அதை எதிர்த்து இருப்பேன்.

மேலும், மதம் என்பது ஒரு உணர்வுபூர்வமான விடயம்.



அமைச்சர் மனோ வலியுறுத்து

இதில் அரசியல் விளையாட்டு கூடாது. அந்த அந்த மத விவகாரங்கள் சம்பந்தப்பட்ட மதத்தை சேர்ந்தவர்களிடம் இருப்பதே பொருத்தமானது. குறிப்பிட்ட அமைச்சர் அல்லது பிரதி அமைச்சர், அந்த அமைச்சு கையாளும் மத ஸ்தலங்களுக்குள் செல்ல வேண்டும். மத தலைவர்களுடன் உரையாட வேண்டும். மத உணர்வுகளை, முழுமையாக புரிந்துகொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, தற்போது நிகழ்ந்திருப்பது ஒரு குளறுபடியே. எங்களை அவமானப்படுத்திக்கொள்ள இந்த அரசை நாம் உருவாக்க பங்களிக்கவில்லை. இந்து கலாசார அமைச்சு இது வரை, டி.எம். சுவாமிநாதனிடம் இருந்தது போதும்.

அதை பிரித்து எடுத்து வேறு ஒரு பொருத்தமான அமைச்சுடன் சேர்த்து விடுங்கள். காதர் மஸ்தான், மீள்குடியேற்ற, புனர்வாழ்வு பிரதி அமைச்சராக இருக்கட்டும்.

இல்லாவிட்டால், இதை தமிழ் இந்துக்களை பலவீனப்படுத்தும் செயற்பாடாகவே நாம் கருதுவோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## எலிசபெத் மகாராணியின் விருது பெறுவதற்கு இலங்கைப் பெண் தேர்வு



கொழும்பு, ஜுன் 14

எலிசபெத் மகாராணியின் விருது பெற இலங்கைப் பெண்ணான பாக்கியா விஜயவர்த்தன தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

மகாராணியின் இளம் தலைவர் விருதை இவர் பக்கிங்ஹாம் மாளிகையில் எலிசபெத் மகாராணியிடம் இருந்து பெற்றுக் கொள்ளவுள்ளார்.

இந்த விருது வழங்கும் நிகழ்வு இம்மாதம் 26 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

சமூகத்தில், நாட்டில் வாழ்க்கையை மாற்றி அமைக்கும் முயற்சியில் ஈடுபட்ட இளம் தலைமுறையினருக்கே 'மகாராணி இளம் தலைவர் விருது' வழங்கப்பட்டு வரு கிறது. இந்த விருது பொது நலவாய நாடுகளைச் சேர்ந்த இளம் தலைமுறையினருக்கு வழங்கப்படுகிறது.

இலங்கை சப்ரகமுவ மாகாணத்தைச் சேர்ந்த 29 வயதான பாக்கியா உணவுப் பாதுகாப்பை மக்களிடையே ஊக்குவித்தமைக்காக இந்த விருது அவருக்கு வழங்கப்படுகிறது.

பாக்கியா வீட்டிலுள்ள தோட்டத்தில் இருந்து உணவுப் பொருள்கள், காய்கறி, பழவகைகளை உற்பத்தி செய்யுமாறு பொதுமக்களைத் தூண்டி வந்துள்ளார்.

ஆயிரக்கணக்கான போட்டியாளர்களிடையே இலங்கையைச் சேர்ந்த பாக்கியா தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## புதுக்குளம் கனிஷ்ட வித்தியாலய புதிய கட்டடம் நேற்றுமுன்தினம் திறப்பு

வவுனியா புதுக்குளம் கனிஷ்ட வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட ஆரம்ப கல்வி கற்றல் வள நிலைய கட்டடம், கல்வி இராஜங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

கல்வி அமைச்சினால் நிர்மாணிக்கப்பட்ட இந்தக் கட்டடம் மாணவர்களிடம் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டது.

இந்தப் புதிய கட்டட நிர்மாணப் பணிகளுக்கு கல்வி அமைச்சு ஒரு கோடி 76 லட்சத்து 68ஆயிரத்து 576 ரூபா 50 சதம் செலவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



இந்த நிகழ்வில் பாடசாலையின் அதிபர் திருமதி.எஸ்.கமலாம்பிகை, வடமாகாண கல்வி அமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், கல்வித் திணைக்கள அதிகாரிகள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

## மன்னாரில் மனித எலும்புக்கூடு அகழ்வு; முழுமையான மனித எலும்புக்கூடு மீட்பு

### மக்கள் திரண்டதால் பதற்றம்



மன்னார், ஜுன் 14

மன்னார் நகர நுழைவாயிலில் உள்ள 'லங்கா சதொச' விற்பனை நிலைய வளாகத்தில் அகழ்வுப் பணி நேற்று 13 ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிலையில், மனித எலும்புக்கூடுகள் அகழ்வு பணியை மேற்கொள்வதற்காக யாழ்.பல்கலைகழக மருத்துவ பீட மாணவர்களும் பயிற்சி நிலைய வைத்திய அதிகாரிகளும் இணைந்து கொண்டுள்ளனர்.

மன்னார் நீதிவான் ஏ.ஜீ. அலெக்ஸ்ராஜா முன்னிலையில் நேற்று இந்த அகழ்வுப் பணிகள் தொடர்ந்தன.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் அகழ்வுப் பணி இடம்பெற்ற போது நூற்றுக் கணக்கான மக்கள் அந்தப் பகுதியில் சூழ்ந்து கொண்டமையால் சற்று பதற்ற நிலை ஏற்பட்டது.

இதன் போது, முழுமையாக மீட்கப்பட்ட மனித எலும்புக் கூடு மற்றும் மண்டையோடுகளைப் பார்க்க மக்கள் எத்தனித்தனர்.

அதனைத் தொடர்ந்து பொலிஸார் கூடி நின்ற மக்களை அங்கிருந்து வெளியேற்றி நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

## மக்கள் ஆர்ப்பாட்டம்



கொழும்பு, ஜுன் 14

கினிகத்தேனை நகரப் பகுதியில் கிராம மக்கள் நேற்று முற்பகல் 11 மணியளவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பல கிராமங்களுக்குச் செல்லும் சுமார் 09 கிலோ மீற்றர் கொண்ட பிரதான வீதியான கினிகத்தேனை நகரத்திலி ருந்து பேரகொல்ல வழியாக கப்புகெதர, ஹேப்பகந்த, ஒரகட ஆகிய கிராமங்களுக்குச் செல்லும் வீதி குண்டும் குழியுமாகக் காணப்படுவதால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை அனுபவித்து வந்தனர்.

இந்த நிலையில், 2 ஆயிரம் குடும்பங்கள் பயன்படுத்தும் இந்த வீதி சுமார் 6 வருடங்களுக்கு மேல் புனரமைக்காமல் அரசியல்வாதிகள் காலம் தாழ்த்தி வருகின்றனர் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட் டவர்கள் தெரிவித்தனர்.

பலமுறை மலையக அரசியல் தலைவர்களிடம் முறையிட்டும் இது வரை எவரும் கவனத்திற்கொள்ளவில்லை எனவும், இதனாலேயே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகிறோம் என அவர்கள் தெரிவித்தனர்.

## கவுதமாலா எரிமலை வெடிப்பு:
# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 50 பேரை இழந்த பெண்மணி



கவுதமாலா சிட்டி, ஜுன் 14

கவுதமாலாவில் உள்ள ஃப்யூகோ எரிமலை கடந்த வாரம் வெடித்துச் சிதறியதில் பெண் ஒருவரின் குடும்பத்தைச் சேர்ந்த 50 பேர் காணாமற் போயிருக்கின்றனர்.

கவுதமாலாவில் உள்ள ஃப்யூகோ எரிமலை கடந்த வாரம் வெடித்துச் சிதறியது. இதில் 110 பேர் உயிரிழந்தனர். 200 இற்கும் மேற்பட்டோர் காணாமற் போயுள்ளனர்.

இந்த நிலையில், எரிமலை சாம்பலில் சிக்கி யூஃபிமியா கார்சியா என்பவரின் உறவி னர்கள் 50 பேர் காணாமற் போயுள்ளனர் எனத் தெரியவந் துள்ளது.

50 வயதான கார்சியாவுடன் 9 பேர் பிறந்துள் ளனர். மூன்று தலைமுறை கண்ட கார்சியா வின் 75 வயது தாயும் இந்த எரிமலை வெடிப்பில் காணாமற் போயிருக்கிறார்.

பல நாள்களாகியும் என் பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகள் என 50 பேரை காணவில்லை என கார்சியா கவலையுடன் கூறுகிறார்.

## ட்ரம்பின் அழைப்பை ஏற்று
# அமெரிக்கா செல்ல கிம் ஜாங் உன் திட்டம்



அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் அழைப்பை ஏற்று அமெரிக்கா செல்ல வட கொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன் திட்டமிட்டுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகி யுள்ளன.

பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் – அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இடையேயான சந்திப்பு நேற்றுமுன்தினம் சிங் கப்பூரில் நடைபெற்றது.

இந்த சந்திப்பின் போது, அமெ ரிக்கா – வடகொரியா இடையில் வரலாற்றுமுக்கியத்துவம்வாய்ந்த அணு ஆயுத ஒழிப்பு ஒப்பந்தம் கையெழுத்தானது. இதனை இந் தியா உள்பட பெரும்பாலான உலக நாடுகள் வரவேற்றுள் ளன. ஐக்கிய நாடுகள் சபையும் மகிழ்ச்சி தெரிவித்துள்ளது.

இந்த சந்திப்பின்போது அமெ ரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், கிம் ஜாங் உன்னை அமெரிக்காவுக்கு வரு மாறு அழைப்பு விடுத்தார்.

அதேபோல் ட்ரம்பை வடகொரி யாவுக்கு வருமாறு கிம் அழைத் தார். இந்த நிலையில், ட்ரம்பின் அழைப்பை ஏற்று அமெரிக்கா செல்லகிம்ஜாங்உன்திட்டமிட்டுள் ளார்எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிரியாவில் அரசு படைகளின் வான் தாக்குதலில் 10 பேர் பலி



சிரியாவின் வடகிழக்கு பகுதியில் அரசு படையினர் நடத்திய வான்வழி தாக்குதலில் 10 அப்பாவி பொது மக்கள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

சிரியாவில் பல்வேறு கிளர்ச்சியாளர்க ளுக்கும், அரசு படைகளுக்கும் இடையே கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் உள்நாட் டுப்போர் நடந்து வருகிறது. அங்குள்ள இட்லிப் மாகாணத்தின் பெரும்பாலான பகுதிகளை கிளர்ச்சியாளர்கள் தங்கள் வசம் வைத்துள்ளனர்.

இந்த நிலையில், சிரியாவின் வடகிழக்கு பகுதியில் அமைந்துள்ள ஹசாகே மாகா ணத்தில் அமெரிக்கா தலைமையிலான படையினர் நேற்று வான்வழி தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்தத் தாக்குதலில் 10 அப்பாவி பொதுமக்கள் உயிரிழந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இட்லிப் மாகாணத்தின் பின்னிஷ், ராம் ஹம்தான், டப்தனாஸ் கிராமங்களை குறிவைத்து நேற்றுமுன்தினம் சிரிய அரசு படைகள் நடத்திய வான்வழி தாக் குதலில் ஓர் இளம்பெண் உட்பட 16 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 18 பேர் படுகாயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

முன்னதாக கடந்த 8 ஆம் திகதி இந்த மாகாணத்தில் ரஷ்யப் படைகள் நடத்திய வான் தாக்குதலில் 44 பேர் உயிரிழந்தமை அங்கு சோகத்தை ஏற்படுத்தி இருந்தது.

சிரிய அரசு படைகளின் இந்த வான்தாக் குதல் தொடர்பாக ஐ.நா. பொதுச்செய லாளர் ஆன்டனியோ குட்டரெஸ் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளார்.

இட்லிப் மாகாணம் போர் நிறுத்த பகுதியாக அங்கீகரிக்கப்பட்டு இருக்கும் நிலையில், அந்த ஒப்பந்தத்துக்கு உறுதி யேற்றவர்கள், தங்கள் பொறுப்புடை மையை உறுதி செய்ய வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.


# கோஹ்லியின் சவாலை ஏற்று உடற்பயிற்சியில் ஈடுபட்டார் மோடி

புதுடில்லி, ஜுன் 14

கிரிக்கெட் வீரர் விராட் கோஹ்லி யின் சவாலை ஏற்ற பிரதமர் மோடி, தான் உடற்பயிற்சி செய் கின்றமையை வீடியோ எடுத்து வெளியிட்டுள்ளார்.

மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் ராஜ்யவர்தன் சிங் ரத்தோர் உடற்பயிற்சி செய்வது போன்ற வீடியோவை கடந்த மாதம் வெளியிட்டார். நாம் உறு தியாக இருந்தால் தான் நாடு உறுதியாக இருக்கும், அதனால், அனைவரும் உடற் பயிற்சி செய்ய வேண்டும் என்று வலியு றுத்தி விராட் கோஹ்லி, சாய்னா நேவால், ஹிர்த்திக் ரோஷன் ஆகியோரை பரிந்துரை செய்தி ருந்தார் ரத்தோர்.

இதையடுத்து, ரத்தோரின் சவாலை ஏற்றுக்கொண்ட கோஹ்லி, தானும் உடற்பயிற்சி செய்வது போன்ற வீடியோவை டுவிட்டரில் வெளியிட்டு, அதில் தன் மனைவி அனுஷ்கா சர்மா, பிரதமர் மோடி, டோனி ஆகி யோரை பரிந்துரை செய்தார். இந்த சவாலை ஏற்ற பிரதமர் மோடி,



தனது உடற் பயிற்சி வீடியோவை விரைவில் வெளியிடுவேன் என கூறியிருந்தார்.

இந்த நிலையில், விராட் கோஹ் லியின் சவாலை ஏற்று உடற் பயிற்சி மற்றும் யோகா செய்யும் வீடியோவை பிரதமர் மோடி நேற்று வெளியிட்டார். காலை நேர உடற்பயிற்சி மற்றும் யோகா மட்டுமின்றி பஞ்சபூத தத்து வத்தைவிளக்கும்நடைபாதையில் நடை பயிற்சி மேற்கொள்வதை வீடியோ எடுத்து பதிவு செய் துள்ளார். இந்த பயிற்சிகள் தனக்கு புத்துணர்ச்சி தருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பங்களாதேஷில் பலத்த மழை, நிலச்சரிவு!



14 பேர் பலி

பங்களாதேஷில் பலத்த மழை, நிலச்சரிவால் 14 பேர் பரிதாப மாக உயிரிழந்துள்ளனர். பங்களாதேஷில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இந்த மழையால் மியன்மார் எல்லையில் உள்ள காக்ஸ் பஜார், ரங்கமாதி மாவட்டங்களில் பெரும் பாதிப்பு ஏற்பட்டு உள்ளது.

தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கி உள்ளது. சாலை களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உள்ளது.இந்த தொடர் மழை யின் காரணமாக இஸ்லாம்பூர், புரிகாட், அம்டோலி, ஹத்திமாரா, போரோகுல்பாரா, சாரைபாரா பகுதிகளில் பெருத்த நிலச் சரிவுக ளும் ஏற்பட்டுள்ளன.

இந்த மழையாலும், நிலச்சரி வாலும் மியன்மாரில் இருந்து அகதிகளாக வந்து உள்ள பல்லாயிரக்கணக்கான ரோஹிங்யா முஸ்லிம் மக்கள் பெரும் பாதிப்புக்கு ஆளாகி உள்ளனர்.

அவர்கள் மூங்கிலாலும், பிளாஸ்டிக் பலகைகளாலும் கொண்டு அமைக்கப்பட்டு உள்ள தற்காலிக குடியிருப் புகளில்தான் வசித்து வருகின்றனர். அதில் 1,500 தங்குமிடங்கள் பெருத்த சேதம் அடைந்து உள்ளன.

கோக்ஸ் பஜாரில் ஒரு மண் சுவர் இடிந்து விழுந்ததில் ஒரு ரோஹிங்யா முஸ்லிம் பெண்ணும், அவரது 2ட வயதான ஆண் குழந்தையும் சிக்கிக்கொண்டனர்.

இதில் குழந்தை பரிதாபமாக இறந்தது. தாய், மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப் படுகிறது.இதேபோன்று பலத்த காற்று வீசியதில் ஒரு மரம் வேரோடு சாய்ந்து முகமது அலி என்ற ரோஹிங்யா முஸ்லிம் வாலிபர் பலி ஆனார். மழை, நிலச்சரிவுகளில் மொத்தம் 14 பேர் பலியாகி உள்ளனர் என்று அங்கு இருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

இதை ரங்கமாதி அரசு மருத்துவ அதிகாரி உறுதி செய்தார். பலி எண்ணிக்கை மேலும் உயரக்கூடும் என அவர் தெரிவித் தார்.

ரோஹிங்யா முஸ்லிம் அகதிகள் ஒரு லட்சம் பேர் அவதியுற்று வருகிற நிலையில் அவர்களை வேறு இடங்களில் குடியமர்த் துவதற்கு சர்வதேச தொண்டு நிறுவனங்களின் உதவியை நாடி உள்ளதாக தேசிய பேரிடர் மேலாண்மை மற்றும் நிவாரண அமைப்பை சேர்ந்த முகமது ஷா கமால் தெரிவித்தார்.மழையை எதிர்பார்த்து ஏற்கனவே 28 ஆயிரம் அகதிகள், பாதுகாப்பான இடங்களுக்கு இட மாற்றம் செய்யப்பட்டு உள்ளனர்.

ஐ.நா. சபையின் அகதிகள் அமைப்பு, ரோஹிங்யா அகதி கள் நிலவரம் குறித்து கூறுகையில், அகதிகளை இட மாற்றம் செய் வதற்கு காலி மனைகள் இல்லை. இதனால் அவர்களை இடமாற் றம் செய்வது சவால் ஆக உள்ளது. ஆபத்தான நிலையில் இருப் பதாக 2 லட்சம் பேர் அடையாளம் காணப்பட்டு உள்ளனர். செப் டம்பர் மாதத்துக்குள் அவர்களை பசான்சார் தீவு பகுதிக்குத்தான் மாற்ற வேண்டி இருக்கிறது என்று கூறியது.

இதற்கு இடையே அடுத்த 24 மணி நேரத்துக்கு அங்கு மிதமான மழை முதல் பலத்த மழை வரை பெய்வதற்கான சாத்தியக் கூறு கள் இருக்கின்றன என வானிலை ஆராய்ச்சித்துறை கூறுகிறது.

# மானியத்தில் வழங்கப்பட்ட இரு சக்கர உழவு இயந்திரங்களை பறிமுதல் செய்ய கமநல சேவைகள் ஆணையாளர் தீர்மானம்

முல்லைத்தீவு, ஜூன் 14

மீள்குடியேற்ற காலப் பகுதியான 2010 மற்றும் 2012 காலப்பகுதியில் கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு 50 வீத மானியத்தில் வழங்கப்பட்ட இரு சக்கர உழவு இயந்திரங்களுக்கான மிகுதி பணம் செலுத்தி முடிக்கப்படாத அனைத்து உழவு இயந்திரங்களையும் பறிமுதல் செய்ய கமநல ஆணையாளர் மாவட்டங்களுக்கு பணித்துள்ளார் என மாவட்ட கமநல சேவைகள் நிலைய ஆணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்திலும் 2010 மற்றும் 2012 ஆகிய காலப்பகுதியில் கடந்த அரசின் பொருளாதார அமைச்சும் ஜப்பான் நிறுவனம் ஒன்றும் இணைந்து கிளிநொச்சியில் உள்ள எட்டு கமநல வேசவைகள் நிலையத்தால் 127 விவசாயிகளுக்கு இரு சக்கர உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

ஐந்து இலட்சத்து 25 ரூபா பெறுமதியான இரு சக்கர உழவு இயந்திரத்தைப் பெற்றுக் கொண்ட விவசாயி ஒருவர் இரண்டு இலட்சத்து 50 ரூபாவை தவணை அடிப்படையில் செலுத்த வேண்டும்.

ஆனால், கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்படி உழவு இயந்திரங்களை பெற்றுக் கொண்ட ஒரு சில விவசாயிகளைத் தவிர பெரும்பாலானவர்கள் தவணைப் பணத்தைச் செலுத்தி முடிக்கவில்லை.



தொடர்ச்சியாக மாவட்டத்தில் கடந்த மூன்று வருடங்களாக நிலவி வருகின்ற வறட்சி, மாவட்டத்தில் ஏற்பட் டுள்ள வறுமை, உற்பத்தியாளர்களுக்கு உத்தரவாதம் இல்லாத நிலைமை போன்ற காரணங்களால் விவசாயிகளால் இந்தப் பணத்தைச் செலுத்த முடியாது போய்விட்டது.

அத்தோடு பலரது இரு சக்கர உழவு இயந்திரம் பழுதடைந்த போது அவற்றை திருத்தி பயன்படுத்துவதற்கான உதிரிப் பாகங்களை பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. அதனால், அவற்றை கொண்டு வருமானத்தை பெற்றுக் கொள்ள முடியாது போய்விட்டது. இதனாலேயே, பணத்தை செலுத்த முடியவில்லை என மாவட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனாலும், கடந்த வாரம் கிளிநொச்சி கமநல சேவைகள் நிலையத்தில் இடம் பெற்ற இந்த விவசாயிகளுடனான கலந்துரையாடலில் மாவட்ட கமநல ஆணையாளர் ஆயகுலன் எதிர்வரும் நவம்பர் மாதத்திற்குள் பணத்தைச் செலுத்தி முடிக்க வேண்டும் என்றும் அதற்கிடையில் இம் மாதத்திற்குள் 75 வீதப் பணத்தைச் செலுத்தியிருக்க வேண்டும் என்றும் தவறும் பட்சத்தில் பொலிஸாரை கொண்டு உழவு இயந்திரங்களை பறிமுதல் செய்து ஏலத்தில் விடுமாறு கமநல அபிவிருத்தி ஆணையாளர் தெரிவித்துள்ளார் எனக் குறிப்பிட்டார்.

மாவட்ட விவசாயிகள் எதிர்நோக்கும் மிக மோசமான நிலைமையினை அமைச்சு, உயரதிகாரிகள் மட்டங்களுக்கு எடுத்துச் சென்று விவசாயிகள் பாதிக்கப்படாத வகையில் தீர்மானங்களை கொண்டு வருவதற்கு அரசியல்வாதிகள் நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும் என விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (க - 70)

## கிளிநொச்சியில் 28 பேருக்கு செயற்கை கால்கள் வழங்கல்




கிளிநொச்சி பிரதேசத்தில் விசேட தேவைகளை உடைய 28 பேருக்கு இராணுவத்தினரால் செயற்கை கால்கள் வழங்கப்பட்டுள்ளன.

குண்டசாலை உடல் ஊனமுற்றோருக்கான நிலையத்துடன் இணைந்து கிளிநொச்சி பாதுகாப்பு படை தலைமையகம் இந்த நடவடிக்கையை கடந்த சனிக்கிழமை மேற்கொண்டுள்ளது.

கிளிநொச்சி நல்லிணக்க நிலையத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் 12 லட்சம் ரூபா பெறுமதியான செயற்கை கால்கள் வழங்கப்பட்டன.

இந்தப் பகுதியில் வசிக்கும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் இருந்து அரச அதிகாரிகளின் உதவியுடன் பயனாளிகள் அடையாளம் காணப்பட்டு, பின்னர் அவர்களிலிருந்து சுமார் 28 பொதுமக்கள் தெரிவு செய்யப்பட்டு இந்தத் திட்டத்தின் கீழ் செயற்கை கால்கள் வழங்கப் பட்டன.

வட பகுதி மக்களின் நலன் கருதி அவர்களின் வாழ்வாதாரத்தையும் , வாழ்க்கைத்தரத்தையும் உயர்த்தும் வகையில் இலங்கை இராணுவத்தினரால் இதுபோன்ற பல சமூக நலத் திட்டங்கள் ஒழுங்கு செய்யப் பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## புத்தளம் குடிதண்ணீர் சுத்திகரிப்பு நிலையம் பொதுமக்கள் பாவனைக்கு வழங்கப்பட்டது



புத்தளம், ஜூன் 13


புத்தளம் மாவட்டம், புளிச்சாக்குளம் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட சுத்தமான குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்வதற்கான குடிதண்ணீர் சுத்திகரிப்பு நிலையத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொதுமக்களின் பாவனைக்கு நேற்று கையளித்தார்.

இந்தத் திட்டத்தின் மூலம் இனங்காணப்படாத சிறுநீரக நோய் ஏற்படுவது மட்டுப்படுத்தப்படும். இதன்மூலம் சுமார் 1000 குடும்பங்கள் நன்மையடையவுள்ளன.

இந்தத் திட்டம் 22 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் உள்ளிட்ட அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

## சுற்றுலாத்துறை வருமானமாக 400 கோடி டொலர் இலக்கு!



கொழும்பு, ஜூன் 14

சுற்றுலாத்துறையின் மூலம் 400 கோடி அமெரிக்க டொலர்களை வருமானமாக ஈட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என சுற்றுலாத்துறை அபிவிருத்தி அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

சுற்றுலாத்துறையின் ஊடாக கடந்த ஆண்டு 300 கோடி அமெரிக்க டொலர்கள் வருமானமாகக் கிடைத்துள்ளது என சுற்றுலா மற்றும் ஹொட்டேல் முகாமைத்துவம் தொடர்பான நிறுவனத்தின் 39 ஆவது பட்டமளிப்பு நிகழ்வில் அமைச்சர் குறிப்பிட்டார்.

## பேருவளை - அளுத்கமவில் சேதமுற்ற சொத்துக்களுக்கு விசேட இழப்பீடு

பேருவளை, அளுத்கம பிரதேசங்களில் இடம்பெற்ற சம்பவங்களினால் சேதமடைந்த சொத்துக்களுக்கு விசேட இழப்பீடு வழங்கப் படவுள்ளது.

களுத்துறை மாவட்டத்தில் 2014 ஆம் ஆண்டில் பேருவளை மற்றும் அளுத்கம ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்றபொது மக்கள் குழப்ப நிலையின் காரணமாக பாதிக்கப்பட்ட சொத்துக்களுக்கு நடைமுறையிலுள்ள சட்ட விதிகளின் கீழ் வழங்கக்கூடிய ஆகக்கூடிய இழப்பீட்டுத் தொகையை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

எனினும், இதன்மூலம் உள்ளடக்கப்படாத வீட்டுத் தளபாடங்கள் மற்றும் ஏனைய உபகரணங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு அமைவாக மேலும் செலுத்தவேண்டும் என்று மாவட்ட செயலாளர்களால் நியமிக்கப்பட்டுள்ள விசேட மதிப்பீட்டுக்குழுவால் சிபார்சு செய்யப்பட்டுள்ள கொடுப்பனவை செலுத்தும் வகையில் 155.9 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்வதற்காக மீள்குடியமர்வு புனர்வாழ்வு வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம் சுவாமிநாதன் சமர்ப்பித்த ஆவணங்களுக்கு அமைச்சரவை கொள்கை ரீதியில் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## போராட்டத்திற்கு தயாராகும் இலங்கை நிர்வாக சேவை சங்கம்

கொழும்பு, ஜூன் 14

நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கு கிடைக்க வேண்டிய விசேடக் கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுக்காவிட்டால் எதிர் வரும் நாள்களில் தொழிற்சங்க நடவடிக்கையைமேற்கொள்ளஉள்ளோம்என இலங்கை நிர்வாக சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் இன்று அனைத்து நிர்வாக சேவை உத்தியோகத்தர்களும் நிர்வாக அமைச்சுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

பொது நிர்வாக அமைச்சருடன் பேச்சு நடத்துவதற்காகவே தாம் அழைக்கப்பட்டுள்ளோம் என அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

## உயிரிழந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினருக்கு நஷ்டஈடு வழங்குவதற்கான தீர்மானத்துக்கு அமைச்சரவை கடும் எதிர்ப்பைத் தெரிவித்தது.

ஜனாதிபதி மைத்திரி தலைமையில் இடம்பெற்ற அமைச்சரவையின் கூட்டத்தின்போதே இந்த யோசனையை அமைச்சர் சுவாமிநாதன் முன்வைத்தார்.

எனினும் இந்த யோசனைக்கு அமைச்சரவையின் அமைச்சர்கள் பலர் தமது எதிர்ப்பை வெளியிட்டமையுடன் ஜனாதிபதியும் எதிர்ப்பைத் தெரிவித்தார்.

இந்த நிலையில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட இந்த யோசனை நிராகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அரசுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதும். அவர்கள் இனியும் அரசுக்கு ஆதரவை வழங்குவதை விடுத்து விலகிக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பின் சபா குகதாஸ்.

மஹிந்தவை எப்படி மைத்திரி ஏமாற்றி முட்டாளாக்கினாரோ அதேபோன்று கூட்டமைப்பையும் ஏமாற்றி முட்டாளாக்கும் செயற்பாட்டையே மைத்திரி தற்போது முன்னெடுத்து வருகின்றார் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நல்லாட்சி அரசின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எப்படி முட்டையப்பம் சாப்பிட்டு கூட இருந்த நண்பன் மஹிந்தவை முட்டாள்ஆக்கினாரோ அதேபோல் நம்பி வாக்களித்த தமிழ் மக்களையும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் முட்டாளாக்கியது மாத்திரம் அன்றி தான் ஒரு பச்சை இனவாதி என்பதையும் வெளிப்படுத்தி வருகின்றார்.

அத்தோடு சிறுபான்மை இனங்களிடையே முரண்பாடுகள் தோன்றக் கூடிய வகையில் செயற்பாடுகளையும் தொடர்ச்சியாக உருவாக்கி வருகின்றார்.

வடக்கு-கிழக்கு தமிழர் தாயகப் பகுதியில் தற்போது புதிது புதிதாகப் பல்வேறு பிரச்சினைகளை உண்டு பண்ணுவதில் தற்போதைய மைத்திரி-ரணில் கூட்டு அரசு தீவிரமாக உள்ளது.

இதற்குக் காரணம் தமிழ் மக்களை இறுதித் தீர்வு விடயத்தில் இருந்து திசை திருப்புவதே.

நில ஆக்கிரமிப்பு, கடற்றொழில் ஆக்கிரமிப்பு, கனிய மணல் அகழ்தல், மரம் வெட்டுதல், அத்துமீறிய குடியேற்றம், சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலையீடு, அரச ஊழியர்களாகச் சிங்களவரைத் தமிழர் பகுதியில் நியமித்தல், போதைப்பொருட்கள் கடத்தும் மையமாக வடக்கு மாற்றப்பட்டுள்ளமை இவ்வாறு பல பிரச்சினைகள் கட்டவிழ்க்கப்பட்டுள்ளன.

தமிழ் மக்கள் நல்லாட்சி அரசுக்கு மூன்று ஆண்டுகள் ஆதரவு கொடுத்து எமது ஜனநாயக விட்டுக்கொடுப்பை உலகுக்கும் சிங்கள தேசத்துக்கும் காட்டியுள்ளோம்.

ஆனாலும் கூட்டு அரசோ தமிழர் விரோதப் போக்குடனே செயற்பட்டு வருகின்றது. ஆகவே இதற்கு மேலும் அரசுக்கு ஆதரவாகத் தொடர்வது தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளைக் காட்டிக்கொடுப்பதாகவே அமையும்-என்றார். (ஐ-7)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கினார் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர்.

யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் வடக்கு மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர் ஆகிய பதவிகளுக்காக வடக்கு மாகாணப் பிரதம செயலாளரால் விடுக்கப்பட்ட விண்ணப்பங்கோரலை இரத்துச் செய்ய உத்தரவிடுமாறு கோரி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் உறுதிகேள் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த மனுவை மீதான விசாரணையின்போதே எதிர்மனுதாரரான பிரதம செயலாளரை மன்றில் முன்னிலையாக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் நேற்றுக் கட்டளையிட்டது.

யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் வடக்கு மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர் ஆகிய பதவிகளுக்குத் தகுதியானவர்களை விண்ணப்பிக்குமாறு வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் அண்மையில் பத்திரிகை ஊடாக விண்ணப்பங்கோரல் விளம்பரத்தை வெளியிட்டார்.

பதில் அல்லது நிரந்தரக் கல்விப் பணிப்பாளராகத் தற்போது கடமையாற்றுவதுடன் கல்வி வலயத்தில் 3 ஆண்டுகள் சேவையை நிறைவு செய்திருக்க வேண்டும் என்று அதில் நிபந்தனை விதிக்கப்பட்டது.

இந்த நிபந்தனை சேவைப் பிரமாணக் குறிப்புக்கு முரணானதென குறிப்பிட்டு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் இளங்கோ, சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஊடாக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நீதிப் பேராணை மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

எதிர்மனுதாரர்களாக முறையே வடக்கு மாகாணப் பிரதம செயலாளர், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் மாகாணக் கல்வி அமைச்சர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் வடக்கு மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர் ஆகிய பதவிகளுக்கான விண்ணப்பங்கோரலையும் அதனை மேற்கொண்டு செயற்படுத்துவதனையும் இடைநிறுத்திவைக்கும் இடைக்காலத் தடைக் கட்டளை வழங்கவேண்டும்.

யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் வடக்கு மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர் ஆகிய பதவிகளுக்கான விண்ணப்பங் கோரலை விடுத்த முதலாவது எதிர்மனுதாரர் அவரது பொதுக் கடமையை மீறிய இந்தச் சட்டவிரோத விண்ணப்பங்கோரலை வறிதும் வறிதானதுமாக உறுதிகேள் எழுத்தாணை கட்டளையை வழங்கவேண்டும்.

வழக்குச் செலவு மற்றும் மன்றால் நியாயமானது எனக் கருதும் பிற நிவாரணங்களும் என மனுதாரரால் மனுவில் கோரப்பட்டுள்ளது.

இந்த மனு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் முன்னிலையில் நேற்றுப் புதன்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது, முதலாவது எதிர்மனுதாரரான வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் மன்றில் முன்னிலையாகவில்லை. அவர் சார்பில் உத்தியோகத்தர் ஒருவர் மன்றில் முன்னிலையாகினார்.

இந்த நிலையிலேயே எதிர்மனுதாரரான பிரதம செயலாளரை மன்றில் முன்னிலையாக மன்று கட்டளையிட்டது.

அத்துடன், மனுதாரரின் முதலாவது நிவாரணமான இடைக்காலத் தடை தொடர்பான மன்றின் கட்டளை இன்று வழங்கப்படும் எனக் குறிப்பிட்டு ஒத்தி வைக்கப்பட்டது. (ஐ-7)

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாமே பேசித் தீர்க்கவேண்டும். எமக்குள் எதிரிகளாகப் பார்க்கும் நிலைமைகள் ஏற்படக்கூடாது. இந்த விடயத்தில் அனைத்துத் தமிழ் பேசும் மக்களும் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

இந்து கலாசார பிரதியமைச்சராக முஸ்லிம் நியமிக்கப்பட்டிருப்பதை நிராகரிப்பதுடன் கண்டிப்பதாவும் அவர் கூறியுள்ளார்.

கொக்குவில் தலையாளி அம்மன் கோவிலுக்கு அருகாமையில் அமைந்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமை அலுவலகத்தில் நேற்று மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இந்து சமய விவகார அமைச்சராக இந்து மதத்துடன் எந்தவித சம்பந்தமும் இல்லாத ஒருவரை நியமித்திருப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. அத்தகைய செயற்பாட்டுக்கு வன்மையான கண்டனங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். ஆயினும் இந்த நியமனம் என்பது திட்டமிட்ட வகையில் தமிழ்-முஸ்லிம் உறவைப் பாதிக்கும் வகையில் அரசினால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றதையும் சுட்டிக் காட்டுகின்றோம்.

குறிப்பாக கடந்த 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னரான நாட்களில் நடக்கின்ற ஒவ்வொரு விடயங்களையும் எடுத்தக் கொண்டால் அரசின் திட்டமிட்ட அனைத்துச் செயற்பாடுகளையும் சரியாக விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருக்கும். அவ்வாறு இலங்கைத் தீவில் நடைபெறுகின்ற ஒவ்வொரு விடயங்களைப் போன்றதாகவே மஸ்தானின் பிரதி அமைச்சர் நியமனமும் இருக்கின்றது.

இங்கு தமிழ் மக்கள் மீது கலாசாரங்களைத் திணித்து தமிழ்-முஸ்லிம் இனங்களுக்கிடையில் மத ரீதியிலான வேறுபாடுகளை ஏற்படுத்தும் திட்டமிட்ட செயற்பாடுகளையே அரசு ஏற்படுத்த முனைகின்றது. தமிழ் – முஸ்லிம் மக்கள் ஒருவரையொருவர் எதிரிகளாகப் பார்த்து மோத வைக்கின்ற நிலைமைகளே ஏற்படுத்தப்படுகின்றன.

ஆகவே எங்களுக்கிடையே ஏற்படும் பிரச்சினைகளை நாங்களே பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும். இந்த விடயத்தில் அனைத்து தமிழ் பேசும் மக்களும் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும் – என்றார். (ஐ-7)

## காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

“இரகசியத் தடுப்பு முகாங்கள் எவையும் இல்லை. காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகள் எவரும் இரகசியத் தடுப்பு முகாங்களில் இல்லை என்று ஜனாதிபதி பகிரங்கமாகத் தெரிவித்த பின்னர் எதற்காக இங்கு வருகிறீர்கள்” என்று காணாமற்போனோர் அலுவலகத்தின் ஆணையாளர்களிடம் உறவுகள் நேற்றுக் கேள்வி எழுப்பினர்.

காணாமற்போனோர் அலுவலகத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் உள்ளிட்ட 7 ஆணையாளர்களும் நேற்று புதன்கிழமை திருகோணமலைக்குச் சென்றனர்.

திருகோணமலையிலுள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு அண்மையாகவுள்ள இந்து கலாசார மண்டபத்தில் அமர்வு நடைபெற்றது.

கூட்டத்தைப் புறக்கணித்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் பலர் மண்டபத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்ட கூட்டத்தையும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் புறக்கணித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இந்துக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்றலில் கண்டனப் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இந்து கலாசார அமைச்சராக இந்துமதத்தைச் சேர்ந்த டி.எம். சுவாமிநாதன் உள்ள நிலையில் அதன் பிரதி அமைச்சராக முஸ்லிம் மதத்தைச் சேர்ந்த காதர் மஸ்தான் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு இந்து மத அமைப்புக்கள் உட்பட இந்து மதத்தைச் சேர்ந்த பல தரப்பிலிருந்தும் கடும் எதிர்ப்புக்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. இந்நிலையில் சைவ மகாசபையின் ஏற்பாட்டில் பிரதி அமைச்சர் நியமனத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தின்போது ‘ஜனாதிபதியே இது தான் மதங்களை மதிக்கும் உங்கள் நல்லாட்சியா?’, ‘தமிழ் அரசியல் வாதிகளே ஏன் இந்த மௌனம். இந்து வாக்குகள் மட்டும் தான் தேவையா?’, ‘முஸ்லிம் மற்றும் பௌத்த விவகாரத்துக்கு ஒரு இந்துவை நியமிப்பீர்களா?’, ‘இலங்கையில் இந்து சமய விவகார பிரதி அமைச்சராக நியமிக்க அரசியல் ஒரு பிரதிநிதி இல்லையா?’, ‘சைவத் தமிழர்கள் இந்த நாட்டில் தொடர்ந்தும் அடக்கப்படும் மக்கள் குலமா?’ உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தில் இந்து மத அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட அரசியல் வாதிகள், பொதுமக்களும் கலந்து கொண்டனர். (ஐ-7)

## புலனாய்வுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை மற்றும் ஊடகவியலாளர் கீத் நொயர் கடத்தப்பட்டுத் தாக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பாகவே, சிசிர மெண்டிஸிடம் விசாரணை நடத்தப்பட்டது.

ஆறு மணித்தியாலங்கள், இவரிடம் விசாரணை நடத்தப்பட்டு, வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதாக, மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்ட காலகட்டத்தில் சிசிர மெண்டிஸ், குற்றப் புலனாய்வுப் பிரிவுக்குப் பொறுப்பான அதிகாரியாகப் பணியாற்றியிருந்தார்.

2015 ஆம் ஆண்டு தற்போதைய கூட்டு அரசு பதவிக்கு வந்த பின்னர் அவர், தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

இவர் அளித்த வாக்குமூலத்தில் இருந்து பெறுமதியான தகவல்கள் கிடைத்திருப்பதாக, மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தனர்.

கடந்த 7ஆம் திகதி வியாழக்கிழமை அதிகாலை தலைமன்னார் கடற்கரையில் இருந்து கடற்றொழிலுக்குச் சென்ற மீனவர்கள் இருவரின் சடலங்களே இவ்வாறு கரை ஒதுங்கின என்று அவர்களது உறவினர்கள் அடையாளம் காட்டியுள்ளனர்.

தோமஸ்கிறிஸ்டியன் பூஞ்சன் (வயது -38), தோமஸ் ஆரோக்கிய எமில்டன் (வயது -32) என்ற சகோதரர்களே சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

மீன்பிடிப்பதற்காக ஒரு பைபர் படகில் சகோதரர்கள் இருவரும் கடந்த வியாழக்கிழமை தலைமன்னார் கடற்பகுதிக்குச் சென்றுள்ளனர்.

இந்த நிலையில் அவர்கள் தொழிலுக்குச் சென்ற படகு புங்குடுதீவில் கரை ஒதுங்கியது.

தற்போது மீனவர்களின் சடலங்களும் கரை ஒதுங்கியுள்ளன.

சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை நீதிவான் நேரில் சென்று விசாரணைகளை மேற்கொண்டதுடன், பிரேத பரிசோதனையின் பின்னர் சடலங்களை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ஐ-7)

## விரைவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ தனக்கு அறிவித்துள்ளார் என்று அமைச்சர் சுவாமிநாதன் தெரிவித்தார்.

அமைச்சர் சுவாமிநாதனின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:

மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் பிரதியமைச்சராக காதர் மஸ்தான் நியமிக்கப்பட்டுள்ளார். எனினும் அது குறித்து பல்வேறுபட்ட விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

அந்தத் துறையின் அமைச்சர் என்ற ரீதியில் இந்த நியமனத்துக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. அமைச்சுகளை ஜனாதிபதியே நியமிக்கிறார். எனினும் இந்தவிடயம் தொடர்பில் ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோவுக்கு அறிவித்துள்ளேன். ஆகவே அது தொடர்பில் விரைவில் திருப்திகரமான பதில் ஒன்றை வழங்குவார் என எனக்கு தெரிவித்தார் – என்றுள்ளது. (ஐ)

## இந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்து கலாசார பிரதி அமைச்சு இந்து மதம் சாராத ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ளமைக்கு இந்துக்கள் சார்பில் கடும் எதிர்ப்புக்கள் எழுந்த நிலையிலேயே தாம் இந்த முடிவுக்கு வந்தார் என காதர் மஸ்தான் குறிப்பிட்டார்.

“இந்து கலாசாரப் பிரதி அமைச்சுப் பொறுப்பை எனது கட்டுப்பாட்டிலிருந்து மீளப் பெற்றுக் கொள்ளுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் எழுத்து மூல கோரிக்கையை இன்று (நேற்று) முன்வைத்தேன்.

அது தொடர்பில் சாதகமாகப் பரிசீலிப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி, நாளைய தினம் (இன்று) ஜனாதிபதி செயலகத்துக்கு வருகை தருமாறு பதிலளித்துள்ளார்.

மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் வடக்கு அபிவிருத்தி பிரதி அமைச்சை நான் கேட்டுப் பெற்றுக்கொண்டேன். அவற்றுடன் இணைந்து இந்து கலாசார அமைச்சும் உள்ளது. அதனால்தான் இந்துக் கலாசார அமைச்சுப் பொறுப்பும் என்னிடம் வந்தது.

மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் வடக்கு அபிவிருத்தி பிரதி அமைச்சை மட்டும் நான் வைத்துக் கொள்வதற்காக மீளவும் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்யவேண்டும். அதற்காக ஜனாதிபதியை நாளை (இன்று) சந்திக்கின்றேன்” என்று பிரதி அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்தார். (ஐ)

காலைக்கதிர்
Kalaikkathir



# உலகக் கிண்ண உதைபந்து திருவிழா இன்று ஆரம்பம்




உலகக்கிண்ண உதைபந்துத் தொடரின் 21ஆவது அத்தியாயம் இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில், ரஷ்யா களைகட்ட தொடங்கியுள்ளது.

உலகக்கிண்ணதொடர்நடக்கும்ரஷ்யாவின் நகரங்கள் ஐரோப்பா, ஆசியா ஆகிய இரு கண்டங்களிலும் அமைந்துள்ளது. ஒரே நேரத்தில் இரு கண்டங்களில் நடக்கும் முதல் உலகக் கிண்ண தொடர் இது தான்.

உலகக்கிண்ண கால்பந்தாட்ட போட்டித் தொடர், இன்று முதல் ஜுலை 15ஆம் திகதி வரை 11 நகரங்களில் 12 நவீன கால்பந்தாட்டரங்குகளில் நடைபெறவுள்ளது. இதற்காக போட்டியில் பங்கேற்கும் பிரேஸில், இங்கிலாந்து, ஈரான், அணிகள் ரஷ்யாவை வந்தடைந்துள்ளன.

போட்டிக்கு தேர்வாகியுள்ள 11 நகரங்களில் எகடெரின்பர்க், கலினிங்கிராட் இடையிலான தூரம் மட்டும் 2,424 கிலோமீற்றர் ஆகும். மொஸ்கோவில் இருந்து இங்கிலாந்தின் லண்டனுக்கு செல்லக்கூடிய தூரமும் இது தான்.

இதில் தலைநகர் மொஸ்கோவில் அமைந்துள்ள லுஸ்னிகி விளையாட்டரங்கு மிகப்பெரியதாக அமைந்துள்ளது. அங்கு ஒரே தடவையில் 80,000 இரசிகர்கள் அமர்ந்திருந்து போட்டிகளை இரசிக்க முடியும் ஆரம்பப் வைபவம், அரையிறுதிப் போட்டி, இறுதிப்போட்டி ஆகியவற்றை நடத்தும் பெருமை இந்த மைதானத்தையே சார்கின்றது.

உலகக்கிண்ண உதைபந்து திருவிழாவை நேரில் பார்த்து மெய்சிலிர்க்க பல்வேறு நாடுகளில் இருந்து ஏறக்குறைய 10 இலட்சம் பேர் ரஷ்யாவுக்கு படையெடுப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உள்ளூர் இரசிகர்களையும் சேர்த்து போட்டியை நேரில் காணும் இரசிகர்களின் எண்ணிக்கை 30 இலட்சத்தை தாண்டும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

மொத்தம் நடக்கும் 64 போட்டிகளை நேரிலும், தொலைக்காட்சி, இணையத்தளம் வாயிலாகவும் உலகம் முழுவதும் 300 கோடி பேர் பார்ப்பார்கள் என்று ஒரு புள்ளி விவரம் தெரிவிக்கின்றது.

உலகக் கிண்ணக் கால்பந்து போட்டிக்கான 25 லட்சத்திற்கு மேற்பட்ட ரிக்கெட்டுகள் விற்கப்பட்டுள்ளன. ரிக்கெட்டுகளை வாங்கியதில் போட்டியை நடத்தும் ரஷ்யா முதலிடம் வகிக்கிறது. அந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் இதுவரை 8 இலட்சத்து 72 ஆயிரம் ரிக்கெட்டுகள் வாங்கியுள்ளனர்.

இதுவரை இடம்பெற்ற 20 உலகக் கிண்ணப் போட்டிகளிலும் 11தடவைகள் ஐரோப்பிய அணிகளும் 9 தடவைகள் தென்னமெரிக்க அணிகளும் வெற்றி பெற்றுள்ளன. பிரேஸில் அணி அதிகபட்சமாக 5முறை சம்பியன் பட்டத்தை வென்றுள்ளதுடன் ஜேர்மனி மற்றும் இத்தாலி அணிகள் தலா நான்கு முறை சம்பியன் பட்டங்களை வென்றுள்ளன. இதனைத் தவிர ஆர்ஜென்ரீனா, உருகுவே அணிகள் தலா இரு தடவைகளும் இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் ஸ்பெயின் அணிகள் தலா ஒரு தடவை உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளன.

இம்முறை உலகக்கிண்ணத்தை வெற்றிகொள்ள அதிக வாய்ப்புள்ள அணிகளாக பிரேஸில் நடப்புச் சம்பியன் ஜேர்மனி 2010 சம்பியன் ஸ்பெய்ன் மற்றும் பிரான்ஸ் அணிகள் கால்பந்தாட்ட விற்பன்னர்களாலும் புக்கிகள் எனப்படும் தரகர்களாலும் முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளன.

இவற்றைத் தவிர ஆர்ஜென்ரீனா மற்றும் பெல்ஜியமும் உயர்வாக பேசப்படும் அணிகளாக உள்ளன.

ஆர்ஜென்ரீனா தேசிய அணி மற்றும் பார்ஸிலோனா கழகத்தின் நட்சத்திர வீரரான லயனல் மெஸ்ஸி போர்த்துக்கல் அணியின் தேசிய வீரரும் ரியல் மெட்ரிட் கழக நட்சத்திர வீரருமான கிறிஸ்டியானோ றொனால்டோ பிரான்ஸின் அன்டோனியோ கிறீஸ்மன், ஜேர்மனியின் மெஸூட் ஓஸில், இங்கிலாந்தின் ஹரி கேன் போன்ற வீரர்கள் உலகக் கிண்ண தொடரில் ஜொலிக்கக்கூடிய வீரர்களாக எதிர்பார்க்கப்படுகின்றனர்.

இதேபோல, போட்டிகள் நடைபெறும் மைதானத்தின் சுற்றுப் புறங்கள், வீரர்கள் தங்கியிருக்கும் விடுதிகள் என அனைத்து இடங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளன. இதற்காக விசேட பாதுகாப்பு குழாமொன்றும் பாதுகாப்பு பணியில் அமர்த்தப்பட்டுள்ளது.

இன்றைய தொடக்க போட்டியில் போட்டியை நடத்தும் ரஷ்யாவும், சவூதி அரேபியாவும் பலப்பரீட்சை நடத்துகின்றன.

பல்வேறு சிறப்பம்சங்களுடன் அரங்கேறும் இந்த கால்பந்து தொடர், இரசிகர்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கடிக்கும் என்பது மட்டும் உறுதி. (ஐ)

## பாகிஸ்தான் அணியிடம் ஸ்கொட்லாந்து தோல்வி




ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து அணிக்கு அதிர்ச்சி அளித்த ஸ்கொட்லாந்து அணி, பாகிஸ்தான் அணியிடம் மண்டியிட்டுள்ளது.

இங்கிலாந்து அணியுடனான ஒரேயொரு ஒருநாள் போட்டியை தொடர்ந்து, ஸ்கொட்லாந்து அணி பாகிஸ்தான் அணியுடன் மூன்று போட்டிகள் கொண்ட ரி – ருவென்ரி தொடரில் விளையாடி வருகின்றது.

இதற்கமைய ஸ்கொட்லாந்து அணி மற்றும் பாகிஸ்தான் அணிகள் நேற்று எடின்பர்க் மைதானத்தில் தனது முதலாவது ரி – ருவென்ரி போட்டியில் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி, முதலில் துடுப்பெடுத்தாடியது. அந்த அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 204 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டமாக அணித்தலைவர் சப்ராஸ் அஹமட் ஆட்டமிழக்காது 89 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார். பந்துவீச்சில் எவன்ஸ் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதனையடுத்து 205 என்ற சற்று கடினமான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய ஸ்கொட்லாந்து அணியால், 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 156 ஓட்டங்கள் மட்டுமே பெற முடிந்தது. இதனால் அந்த அணி, 48 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது.

ஸ்கொட்லாந்து அணி சார்பில், மைக்கேல் லீஸ்க் ஆட்டமிழக்காது 38 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். பந்து வீச்சில் ஹசன் அலி, சதாப் கான் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர். இப் போட்டியின் ஆட்டநாயகனாக சப்ராஸ் அஹமட் தெரிவு செய்யப்பட்டார். (ஐ)



## நாடு திரும்பும் இலங்கை வீரர்கள்

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையடி வந்த இலங்கை அணியின் வீரர்களான அஞ்சலோ மத்தியூஸ், லஹிரு கமகே ஆகியோர் நாடு திரும்பவுள்ளனர்.

இலங்கைக்கு எதிராக மேற்கிந்தியத்தீவுகளில் இடம் பெற்று வரும் மூன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரின் முதல் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 226 ஓட்டங்களால் வெற்றிபெற்று தொடரில் முன்னிலையில் உள்ளது.

இந் நிலையில் தொடரில் விளையாடி வந்த இலங்கை அணி வீரர் லஹிரு கமகே உபாதை காரணமாக நாடு திரும்பவுள்ளதுடன் அஞ்சலோ மத்தியூஸ் தனது தனிப்பட்ட காரணங்களுக்காக போட்டியில் விளையாடாது இலங்கை திரும்பவுள்ளார்.

இவர்களுக்குப் பதிலாக இத் தொடரில் விளையாடுவதற்காக இலங்கை அணியின் வீரர்களான தசுன் சானக்கவும் தனுஸ்க குணதிலக்கவும் மேற்கிந்தியத் தீவுகளுக்கு பயணிக்கவுள்ளனர் என்று இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தெரிவித்துள்ளது. (ஐ)

## ஆப்கானிஸ்தான் அணியின் 17 வருட கனவு நனவாகிறது

ஆப்கானிஸ்தான் தனது முதலாவது டெஸ்ட்டை இன்று வியாழக் கிழமை இந்தியாவிற்கு எதிராக விளையாடும்போது அதன் 17 வருட கனவு நனவாகும்.

2001 ஆம் ஆண்டு ஐ.சி.சி ஆப்கானை தனது இணை உறுப்பு நாடுகளில் ஒன்றாக சேர்த்துக்கொண்டது.

அவ்வேளை ஆப்கானிஸ்தான் தலிபானின் கட்டுப்பாட்டின் கீழ் காணப்பட்டது. தலிபானால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு விளையாட்டாக கிரிக்கெட் மாத்திரம் காணப்பட்டது.

எனினும் செப்ரெம்பர் 11 தாக்குதலிற்கு பின்னர் ஆப்கானிஸ்தான் மிக மோசமான உள்நாட்டு யுத்தத்தில் சிக்கியதைத் தொடர்ந்து கிரிக்கெட்டும் மறக்கப்பட்ட விடயமாக மாறியது.

எனினும் பாகிஸ்தான் எல்லையில் உள்ள முகாம்களில் வாழ்ந்த மக்கள் மத்தியில் கிரிக்கெட் தொடர்ந்தும் உயிர்வாழ்ந்தது.

தற்போது தேசிய அணியில் இடம் பெற்றுள்ள பல வீரர்கள் முகாமிலிருந்தே உருவானவர்கள்.

நாடுகடந்த நிலையில் இருந்த ஆப்கானின் கிரிக்கெட்டின் தாயகமாக காணப்பட்ட பெசாவரின் புழுதி மண்ணில் அவர்கள் கிரிக்கெட் விளையாட கற்றுக்கொண்டனர்.

இவர்கள் தற்போது தங்கள் முதலாவது டெஸ்ட் போட்டியை விளையாடத் தயாராகின்றனர்.

இன்று வியாழக்கிழமை ஆப்கானிஸ்தான் டெஸ்ட் போட்டிகளில் விளையாடும் 12 ஆவது நாடு என்ற தகுதியைப் பெறுகின்றது.

நாங்கள் எங்கள் டெஸ்ட் பயணத்தை மேற்கொண்டுள்ள நிலையில் இது எங்களுக்கு மகத்தான தொருதருணம் எனதெரிவிக்கின்றார் ஆப்கானிஸ்தானின் டெஸ்ட் அணியின் தலைவர் ஸ்டனிக்சாய்.



இந்தியாவிற்கு எதிராக முதலாவது டெஸ்டை விளையாடுவது பெருமைக்குரிய விடயம் நாங்கள் எங்கள் திறமையை வெளிப்படுத்த முயல்வோம் என அவர் தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் தரவரிசைப்பட்டியலில் முதலில் உள்ள அணிக்கு எதிராக விளையாடுவது பெருமைக்குரிய விடயம், கிடைக்கின்ற சந்தர்ப்பத்தில் எல்லாம் சிறப்பாக விளையாட முயல்வோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மரண அறிவித்தல்



## திருமதி.கந்தையா நாகம்மா

கோப்பாய் தெற்கு, கட்டப்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. கந்தையா நாகம்மா அவர்கள் 13.06.2018 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு தங்கம்மா அவர்களின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான முத்தையா (ஆசிரியர்), நவரத்தினம் (இலங்கை மின்சார சபை), இராசம்மா மற்றும் திருஞானபூங்கோதை (ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ் சென்றவர்களான அம்பிகைபாகன் (தபாலதிபர்), தங்கராஜா (பொறியியலாளர்) செல்வநாயகம், இராசமலர் மற்றும் தங்கமலர், கனகலிங்கம், கலாநிதி மனோகரன், தவமணி (கணக்காளர்), சுரேஷ் பிறேமச்சந்திரன் (முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்), கலாநிதி சர்வேஸ்வரன் (கல்வி அமைச்சர் வடமாகாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பாக்கியம் காலஞ்சென்ற தியாகராஜா மற்றும் சற்குணமலர், வசுமதி, கமலநாதன், சிவராசா, கோகிலகுமாரி, சுபாசினி ஆகியோரின் அன்பு மாமியாரும்,

சந்திரமோகன், சாந்தினி, முகுந்தினி, தியாகமலர், தியாகரூபன், தியாகவேணி, தியாகசொரூபன், தியாகவதனி, சுதர்சன், முருகன், ஆனந்த குமாரன், ஆரணி, தாராகா, மேனகா, சொரூபிகா, காண்டீபன், பிரியங்கா, அபர்ணா, விக்னேஸ்வர், நிஷா, கீதப்பிரியன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15/06/2018 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கட்டப்பிராயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பிறப்பு 13 - 01 - 1920

மறைவு 13 - 06 - 2018

**தகவல் -**

க.சுரேஷ் பிறேமச்சந்திரன்
(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)
கலாநிதி.க.சர்வேஸ்வரன்
(கல்வி அமைச்சர் - வடமாகாணம்)

021 223 0363
0777 362 481
077 718 4410

அதிக விலை குறைப்புடன் பரிசில்களும்!!!
CROWN க்ரவுன்
மாபெரும் மலிவு விற்பனை
ஜூன் 04 தொடக்கம் 23 வரை
யாழ்ப்பாணம்
வீரசிங்கம் மண்டபம்
(யாழ்ப்பாணக் கோட்டைக்கு முன்னால்)
ஜப்பான் மற்றும் ஐரோப்பாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உயர்தரத்திலான பொருள்கள் குறைந்த விலையில்!!!
விரையுங்கள்
கையிருப்பு உள்ளவரை மட்டுமே!



உங்கள் அபிமான சனல்கள்
அனைத்தும் ஆஸ்க் கேபிள் விஷன் ரி.வி. ஊடாக மட்டுமே ஒளிபரப்பாகின்றன. வேறு எந்தச் சட்டவிரோத அல்லது சட்ட பூர்வமான தொலைக்காட்சி சேவை வழங்குனர்கள் ஊடாகவும் எமது தொலைக்காட்சி சேவைகள் தற்போது ஒளிபரப்பாகவில்லை என்பதை எமது அபிமான நேயர்களுக்கு அறியத் தருகின்றோம். எதிர்காலங்களில் வேறு எந்த நெற்வேர்க்கிலும் இவை ஒளிபரப்பப்படமாட்டா.
707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.06.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.